# விடுதலைப்புலிகள்

குரல்: 74 பங்குனி - சித்திரை 1997 அன்பளிப்பு: 5/=



உள்ளே

★ யசீர் அரபாத்தும் சிங்களப் பேரினவாதமும்

★ வான்படையின் இலையுதிர் காலம்

★ உலக மனச்சாட்சிக்கு ஒரு விண்ணப்பம்


### வடக்கில் படையெடுப்புக்கு ஏற்பாடு! வெளிநாட்டில் சமரசப் பேச்சுக்கள்?

# இராணுவ - அரசியல் வழிமுறைகளில் அரசாங்கம் கையாளப்போவது எதை?

## யதார்த்த நிலைமை பற்றிய புலிகளின் விளக்கம்

**அரசிற்கும் புலிகளுக்குமிடையே இரகசியப் பேச்சுவார்த்தை நடைபெறுவதாக சில சர்வதேச செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டு சமாதானச் சங்கை ஊதியுள்ளன. அதேவேளை, வன்னிமீது பாரியபடை எடுப்பிற்கு, அரசபடைகள், ஆயத்தங்கள் செய்கின்றன என்றும் தகவல் வெளியிட்டு போர் எச்சரிக்கைகளையும் விடுத்துள்ளன. எதிரும் புதிருமான இந்தச் செய்திகளால் தமிழ் மக்கள் குழப்பம அடைந்துள்ளனர். உண்மையில் அரசின் தற்போதைய நிலைப்பாடு என்ன? அது தொடர்பாக புலிகளின் கருத்து என்ன? என்பதை அறிய மக்கள் ஆவலாக உள்ளனர்.**

சந்திரிகா அரசாங்கத்திற்கும் – ஐ. தே. கட்சிக்குமிடையே அண்மையில் ஏற்பட்ட ஒரு இணக்கப்பாடொன்றை அடிப்படையாக வைத்தே சமாதான ஊகங்களை உலக செய்தி நிறுவனங்கள் வெளிப்படுத்தின. தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்க அரசும் எதிர்க்கட்சியும் கூட்டாக முயல்வது என்றும் அத்தகையதொரு முயற்சியை குழப்பியடிக்கும்வகையில் செயற்படுவதில்லை என்றும் அவை, பரஸ்பரம் இணக்கம் கண்டுள்ளன. இதுதான் அந்த உடன்பாடு. இந்த உடன்பாட்டை, அரசு - புலிகளுக்கிடையே நடைபெற இருக்கின்ற பேச்சுவார்த்தைக்கான முன்நிகழ்வாக அர்த்தப்படுத்திக்கொண்ட சில செய்தி நிறுவனங்கள்-பிரித்தானிய அரசின் மத்தியத்துவத்துடன் அரசுக்கும் – புலிகளுக்குமிடையே இரகசியப் பேச்சுக்கள் ஆரம்பமாகிவிட்டதாக ஒரு ஊகத்தைப் பரப்பின. இந்த ஊகத்தில் எந்த உண்மையுமில்லை. அதேவேளை, அத்தகையதொரு சமாதானப் பேச்சிற்கான எந்த ஒரு சமிக்கையையும், புலிகளை நோக்கி, சந்திரிகா அரசாங்கம் விடுக்கவுமில்லை.

எவினும், புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுக்கு தயாராகவே இருக்கின்றது. இராணுவ அழுத்தங்களின்றி ஒரு இயல்பு நிலை தோன்றிய சமரச சூழ்நிலையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது புலிகளின் நிலைப்பாடாகும். அதற்கான சர்வதேச மத்தியத்துவத்தையும் புலிகள் இயக்கம் கோரியுள்ளது. ஆனால், சந்திரிகா அரசாங்கமானது புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களையும் – பேச்சுக்கான சர்வதேச மத்தியத்துவத்தையும், தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றது. அண்மையில், அரசுக்கும் – புலிகளுக்கும் இடையே மத்தியத்துவராக செயற்பட விரும்பிய பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் விருப்பத்தை அரசு பகிரங்கமாகவே நிராகரித்துவிட்டது.

புலிகளுடன் பேசமறுப்பதற்கும் - சர்வதேச மத்தியத்துவத்தை நிராகரிப்பதற்கும் ஆழமான காரணங்கள் உண்டு. தமிழினத்தின் தேசிய தனித்துவத்தையும் – தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளையும் புலிகள் இயக்கம் கட்டிக்காக்க முயல்கின்றது என்பது அரசிற்கு நன்கு தெரியும். உலகளாவியரீதியில் இந்த தேசிய இன தனித்துவங்களை சர்வதேச உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது என்பதும் சிங்கள அரசுக்கு நன்கு தெரியும். எனவேதான், சர்வதேச மத்தியத்துவத்தின்கீழ் புலிகள் இயக்கத்துடன் அரசியல் பேச்சுவார்த்தைகளை நடத்தினால் தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளை வழங்கவேண்டி வந்துவிடும் என்று பேரினவாத அரசு அஞ்சுகின்றது. இந்த உண்மையை மறைப்பதற்காக புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பு என்று உலகிற்குக் காட்டி அதன்வாயிலாக புலிகளுடன் பேசுவதை தவிர்ப்பதிலும் – இனப்பிரச்சனையை உள்நாட்டு விவகாரம் என்ற பரிமாணத்திற்குள் அடக்கி வெளிநாட்டு மத்தியத்துவங்களை தட்டிக்கழிப்பதிலும் சந்திரிகா அரசு குறியாக இருக்கின்றது:

எது எப்படி இருப்பினும். 'இன்றைய சூழலில்' இனப்பிரச்சனைக்கான தீர்வாக சந்திரிகா அரசு இப்போதும் இராணுவத் தீர்வையே வைத்திருக்கின்றது. இராணுவ பலத்தின் மூலம் புலிகள் இயக்கத்தை நசுக்கி விட்டு இலகுவில் விலைபோகக் கூடிய தமிழ்க்குழுக்களை; தமிழரின் ஜனநாயகப் பிரதிநிதிகளாக அங்கீகரித்து, அவர்களுடன் பேசி – தமிழினத்தின் அடிமை சாசனத்தை அவர்களைக் கொண்டே எழுதுவித்து இனப்பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்க்க முடியும் என்ற கற்பனையிலேயே சிங்கள அரசு காலத்தைக் கழிக்க விரும்புகின்றது. அதற்காக ''போர்மூலம் சமாதானம்'' என்ற தனது கொள்கையையே தொடர்ந்து அமுல்படுத்த இருக்கின்றது. இந்தவகையில், அடுத்த படையெடுப்பிற்கான ஆயத்தங்களை அது செய்கின்றது என்பதே இன்றைய யதார்த்தமாகும். ○

## பாவங்களின் அறுவடை!

விமானங்களின் இரைச்சல்
சூழலின் இயல்பைச் சூறையாடுகின்றன.

விமானங்கள் தசைகளைத்தேடி வட்டமிடவும்
வீதிகள் வரண்டு போகின்றன.
கிடங்குகள் நிரம்புகின்றன.

தசைகள் குவியலாக நிற்கும் இடங்களில்
விமானங்கள்
காதலோடு மூக்கை நுழைக்கின்றன.

விமானங்களுக்கு
வெள்ளைச் சீருடை அணிந்த தசைகள்
மிகவும் பிடிப்பானவை.

தேவாலயங்களிலும்
திருக்கோயில்களிலும்
உயிர்கள் பறிபோகாதிருக்க
தசைகள் மன்றாடுகின்றன.
பரிசுத்த ஆலயங்களில்
பரிமாறியிருக்கும் தசைகளை
விமானங்கள் பசியாறுகின்றன.

விமானங்கள் தசைகளைத் தின்னுகின்றன.
உயிர்கள் காற்றில் அலைகின்றன.

எப்போதென்றில்லாமல்
காதுகள் கூர்மையடைவதும்
அண்ணாந்து ஆகாயத்தை துளாவுவதும்
அனிச்சைச் செயலாகிப் போனது.

நிர்மல வானும்
பறவைகளின் நிரைநிரையான பறப்பும்
முன்னரைபோல் பரவசமூட்டுவதில்லை.

விமானங்கள் தின்ற தசைகளின் உயிர்கள்
காற்றில் அலைகின்றன.

பறந்துகொண்டிருந்த விமானங்களின் காற்றாடிகள்
இறுகி விறைத்தன.
இயந்திரங்கள் இறந்த விமானங்கள்
விழுந்து நொருங்கின.

இரை தேடித் திரிந்த விமானங்களை
காற்றிலே தோன்றிய தீயின் நாக்குகள்
தின்னத் தொடங்கின.
துயர் தந்த விமானங்கள்
வானிடை தூளாக வெடித்துச் சிதறின.

பீதியில் உறைந்த விமானங்கள்
காற்றில் ஏறமறுத்தன.
ஓடுபாதையில் இருந்து விலகி
வேலிகளை முறித்து மூடமாகின.

காற்றிலே விஷம் கலந்துவிட்டதாக
விமானங்கள் முறையிட்டன.
விஷம் ஊறிய காற்றை
சுத்திகரிப்பதெலில் சாத்தியமாவதெங்கனம்?

நிர்மல வானிடை நீந்தும் பறவைகள்
அழகுதான் - அதைவிட
எரிந்தபடி பறக்கும் விமானங்கள்
பரவசமூட்டுகின்றன! ○

எஸ். உமாஜிப்ரான்

உள்ளே

## புலிகளின் ஆயுதப் போரும் அரசியல் நோக்கும்: சர்வதேச சமூகத்திற்கு ஒரு உண்மை விளக்கம்.


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# யசீர் அரபாத்தும் சிங்களப் பேரினவாதமும்

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கும் நாசகார நோக்குடன் சிங்கள அரசு நடாத்தும் இந்தப் போருக்கான சர்வதேச அபிப்பிராயம் தனக்குச்சார்பாக உள்ளது என்று காட்ட, சிங்கள அரசு பெருமுயற்சி செய்கின்றது.

உலகத்தலைவர்கள் அல்லது சர்வதேச இராஜதந்திரிகள் – இலங்கையின் இனப்போர் தொடர்பாக - பட்டும்படாமலும் ஒரு அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினால், அதை புலிகளுக்கு எதிரான மூடகமான கண்டனமாக திரிபுபடுத்திக்காட்டுவது சிங்களப்பேரினவாதிகள் கடைப்பிடிக்கும் ஒரு பிரச்சார யுக்தியாகும்.

அண்மையில், கொழும்பு வந்து திரும்பிய பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவரும் பலஸ்தீனத்தின் சனாதிபதியுமாகிய யசீர்அரபாத் அவர்கள், புலிகள் இயககம் தொடர்பாகவும், இலங்கைத்தீவின் இனச்சிக்கலுக்கான தீர்வு தொடர்பாகவும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். அதில் ஒரு விடயத்தை, சிங்களப் பேரினவாதம் தனக்குச் சார்பான வகையில் அர்த்தப்படுத்தி புலிஎதிர்ப்புப்பிரச்சாரம் செய்துள்ளது.

'விடுதலைப் போராட்டத்தை நடாத்துகின்ற இயக்கங்கள் என்ற வகையில் பலஸ்தீன விடுதல இயக்கத்தைப் போன்றே புலிகள் இயக்கத்தையும் நோக்குகின்றீர்களா'? என்ற பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு "இல்லை, பெரிய வித்தியாசமுண்டு" என்று யசீர்அரபாத் பதிலளித்திருந்தார். இந்த யதார்த்தபூர்வமான பதிலை தவறாக விளங்கிக்கொண்ட பேரினவாதசக்திகள், அதை புலிகளுக்கு எதிரான மூடகமான கண்டனம் என்று அர்த்தம் கற்பித்து – பிரச்சாரம் செய்தன. புலிகள இயக்கத்தையும் – தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும், அரபாத், நிராகரித்து விட்டார் என்று எம்பிக்குதித்தன. பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை தேசய விடுதலைப் போராட்டமென்றும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமென்றும், அரபாத், வகைப்படுத்தியுள்ளார் என்று விளக்கம் கொடுத்தன. இந்த விளக்கங்களும் – வியாக்கியானங்களும் தமிழரின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் நோக்கம் கொண்டவை என்பதில் ஐயமில்லை.

எனினும் இரண்டுபோராட்ட இயக்கங்களுக்குமிடையில் 'பெரிய வீத்தியாசமுணடு' என்ற அரபாத்தின் மதிப்பீடு சரியானதாகும். அவரின் மதிப்பீடு புலிகள் இயக்கத்திற்கும் உடன்பாடான விடயமேயாகும்.

உலகின் ஒவ்வொரு விடுதலைப் போராட்டமும் ஒன்றிலிருந்து மற்றையது வேறுபட்டு - தனித்துவமாகவே மிளிர்கின்றது. ஒவ்வொரு போராட்ட இயக்கமும் அதற்கே உரித்தான வரலாற்றுச் சூழலை மையமாகக்கொண்டு தத்தமது கொள்கைகளை - அணுகுமுறைகளை – வகுத்து போராட்டங்களை வழி நடாத்துகின்றன. இதனால் ஒவ்வொரு போராட்ட இயக்கமும், இயல்பாகவே, ஒன்றிலிருந்து மற்றது வேறுபட்டிருக்கின்றது. இந்த நடைமுறை உண்மையையே அரபாத்தும் சுருக்கமாக வெளிப்படுத்தியிருந்தார்.

அதேவேளை புலிகள் இயக்கத்திற்கு சார்பாகவும் – புலிகள் தொடர்பான அரசின் கடுமையான நிலைப்பாட்டை சூசகமாக நிராகரித்தும் அரபாத் கருத்து வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் இனப்போரை நிறுத்தி – சமாதானத்தைக்காண "அரசும் – புலிகளும் பேசவேண்டும்" என்று அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளார். ஆலோசனையுடன் நின்றுவிடாது அரசு – புலிகள் பேச்சுவார்த்தைக்கு.தேவையாயின் "நான் மத்தியத்துவம் செய்யவும் தயார்" என்றும் – அரபாத் – அறிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of
TAMIL EELAM

# புலிகளின் குரல்

புலிகள் இயக்கத்தை தவிர்த்துவிட்டு மற்றைய குழுக்களுடன் பேசமுயலும் அரசின் சூழ்ச்சிகரப்போக்கை நிராகரித்து –புலிகளுடன் அரசு பேசவேண்டும் என்று ஆலோசனை கூறியதன்மூலம் தமிழ்மக்களின் அரசியல தலைமையாக புலிகள் இயக்கத்தை அரபாத் நாசூக்காக அங்கீகரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், அரபாத் கூறிய அரசியல் ஆலோசனைகளையும் – அவர் வெளிப்படுத்திய மத்தியத்துவ விருப்பையும் அவரின் முன்னிலையிலேயே சிங்கள வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் அவர்கள், நிராகரித்து – அரபாத்தை அவமானப்படுத்திவிட்டார்.

இந்தக் கொழும்பு விஜயத்தின் போது "ஆயுதங்களைக் கைவிடும்படி, நீங்கள், புலிகளுக்கு ஆலோசனை கூறுவீர்களா" என்று அரபாத்திடம் கேட்கப் பட்டபோது, சிங்களப் பேரினவாதிகள் விரும்பியதுபோலப் பதிலளிக்காது, "புலிகள் அமைதிவழியை நாட வேண்டும்" என்று ராஜதந்திரரீதியில பதில் அளித்து, கேள்வியை தட்டிக்கழித்தார்.

இந்த வகையில், சிங்கள அரசின் விருந்தினராக கொழும்பு வந்திருந்த யசீர் அரபாத், தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்க புலிகளுடன் பேச வேண்டும் என்று வலியுறுத்தியும் - இதன் மூலம் புலிகள் இயக்கத்தை. தமிழரின் போராட்டசக்தியாக அங்கீகரித்தும்; ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் எனற அரசன் நிபந்தனையை தட்டிக்கழித்து – புலிகளின் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுகொண்டும்; பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் சார்பிலும பலஸ்தீன மக்கள் சார்பிலும் கருத்து வெளியிட்டுள்ளார் என்பதே உண்மையாகும். ஆனால் இந்தப் பேருண்மைகளை சிங்கள அரசு திரிபுபடுத்தியும் - தட்டிக்கழித்தும் நிராகரிததுவிட்டது. எனினும் தமிழர் – சிங்கள இனபபோர் தொடர்பாக அரபாத் வெளியிடடுள்ள கருத்துக்கள் நடுநிலையுடனும் நேர்மையுடனும் அமைந்திருந்தன. போரைநிறுத்தி – பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தைக் காணவேண்டும் என்ற அவரின் விருப்பத்தை புலிகள் இயக்கம் மதிக்கின்றது. அரசிற்கும் புலிகளுக்குமிடையில் மத்தியத்துவததை வகிக்கததயார் என்ற அரபாத்தன் நிலைப்பாட்டை புலிகள் இயக்கம் வரவேற்கின்றது. எனினும் தமிழர் இனப்பிரச்சனைக்கு சமாதானத் தீர்வை நோக்கிய அரபாத்தின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை சந்திரிகா அரசு ஏற்றுக் கொள்ளாது நிராகரிகததன் மூலம் "போர்மூலம் சமாதானம்" எனற தனது இராணுவ நிலைப்பாட்டையே தொடர்ந்து கடைப்பிடிக்க முடிவெடுத்துள்ளது எனபது தெளிவாகின்றது.

ஒட்டுமொத்தத்தில் இலங்கையின் இனபபிரச்சனை பற்றி அரபாத் வெளியிட்ட கருத்துக்கள் முற்றுமுழுதாக தமிழரின் விடுதலைப் போருக்கு சாதகமாகவே அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. ○

# நுணுக்குக்காட்டி

நிரந்தர சமாதானத்தை உறுதிப்படுத்தக் கூடிய நியாயமான தீர்வொன்றுக்கு விடுதலைப் புலிகள் ஒருபோதும் தடையாக இருக்கமாட்டார்கள் என்பதே நான் அறிந்ததெல்லாம். விடுதலைப் புலிகளை ஒதுக்கி ஓரம் கட்டி விட்டு ஒரு நிரந்தர சமாதானத்தை எட்ட முடியுமென்று போடப்படும் தப்புக்கணக்கில் இருந்து நியாயமான விடைகிடைக்கும் என நான் நம்பவில்லை.

அன்று மாகாணசபை உருவாக்கத்தையே ஆக்ரோசத்தோடு எதிர்த்த இன்றைய அரசாங்கத்தின் முக்கிய பங்காளிகள் படி இறங்கி வந்து அதிகாரப்பரவலாக்கத்திற்கு அர்த்தம் கொடுக்க வேண்டும் என விதந்துரைத்து வருவதற்கு விடுதலைப் புலிகளின் இருப்புத்தான் காரணம் என்பதை யார்தான் மறுக்கப்போகிறார்கள். விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க கங்கணம் கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியுள்ள இன்றைய அரசாங்கம் அம்முயற்சியில் வெற்றிபெறுமானால் அதிகாரப் பரவலாக்கத்திற்குப் பதிலாக அராஜகப் பரவலாக்கத்தைத்தான் செய்யும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. விடுதலைப் புலிகள் கொச்சைப்படுத்தப்பட்ட சரணாகதிகளைத்தான் விரும்பவில்லை. இதனைப் புரிந்து கொண்டால் நிரந்தர சமாதானத்திற்கு வானம் எல்லையாக இருக்க முடியாது. கைக்கெட்டும் தூரத்தில்தான் அது இருக்கிறது.

அலிசாகிர் மௌலானா
ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்
சரிநிகர் ஏப்ரல் 03 - 25 – 1997

கேள்வி:– விடுதலைப் புலிகளின் நிலைப் பாட்டில் ஏதாவது மாற்றம் வேண்டுமென்று நினைக்கிறீர்களா?

பதில்:– விடுதலைப் புலிகள் தமது நிலைப் பாட்டை மாற்றக் கூடாது.

அமரர் எஸ். ஜே. வி செல்வநாயகம் போன்றோர் அகிம்சை வழியில் தமிழர் உரிமைக்காகப் போராடிய போது இந்த நாட்டின் அரசாங்கங்கள் அதற்கு மதிப்பளிக்கவில்லை.

டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் போன்றோர் அகிம்சா வழியில் சத்தியாக்கிரகம் செய்த போது அவர்களை இந்த நாட்டு அரசு பொலிசாரையும், காடையரையும் கொண்டு வன்முறையை அவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்டது. அதன் காரணமாகவே ஜனநாயக வழியில் நம்பிக்கையிழந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள் அந்த வழியில் இளைஞர்கள் செயற்பட்ட காரணத்தினாலேயே அவர்களுக்கு மரியாதை வழங்கப்பட்டது ஆகவே விடுதலைப் புலிகள் தமது வழியிலேயே திடமாக நின்று தமது பிரச்சனைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

அமைச்சர் எஸ். தொண்டமான்
தினக்குரல் 6. 4. 97

பூவோடும் பொட்டுடனும் தமிழ்ப் பெண் ஒருத்தி செல்ல முடியாத அவலம் இந்த அரசின் ஆட்சிக்காலத்தில் உள்ளது.

தமிழ் மக்கள்மீது அடாவடித்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என பாரதி பாடினார். ஆனால் தமிழினம் தலை நிமிர்ந்து வாழமுடியாத துன்பமான நிலையே இன்று காணப்படுகிறது.

விமான நிலையத்தில் கடத்தலில் ஈடுபட்ட தமிழர் அல்லது முஸ்லிம் ஒருவர் கைதானால் அவர்களின் இனத்தைக் குறித்து செய்தி வெளியிடப்படுகிறது. ஆனால் சிங்களவர் ஒருவர் கைதானால் அவ்விதம் கூறப்படுவதில்லை. இனவாதம் தலைவிரித்தாடுகின்றது.

சிறுபான்மை இனத்தவரின் உரிமையை பாதுகாப்பதாக அரசு கூறிவந்தது. ஆனால் உரிமைகள் யாவுமே பறிபோவதை எத்தனை நாட்களுக்குத்தான் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? முஸ்லிம்களின் ஹஜ், இந்துக்களின் சிவராத்திரி விடுமுறைகள் பறிககப் பட்டுள்ளன. ஹஜ் பெருநாள் தினத்தில் வழக்கு விசாரணைகளும் இடம்பெறுகின்றன.

ஏ. எச். எம். அஸ்வர்
ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்
வீரகேசரி 11. 04. 97

பெரும்பான்மையினர் தமது மேலாதிக்கத்தை தொடர்ந்து பேணிக்கொண்டு சிறுபான்மையினருக்கு சலுகைகளை மாத்திரம் வழங்குவதன் மூலம் இனப்பிரச்சனையை தீர்க்க முடியாது. தமிழ்மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் வழங்கப்படாத வரை இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண முடியாது.

அமைச்சர் பேர்னாட் சொய்சா
தினகரன் 20. 3. 1997

# புலிகளின் ஆயுதப் போரும், அரசியல் நோக்கும்: சர்வதேச சமூகத்திற்கு ஓர் உண்மை விளக்கம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்தரித்து, சர்வதேச அரசியல் அரங்கில் சிறீலங்கா அரசு மேற்கொண்டுவரும் விசமப் பிரச்சாரத்திற்கு ஆப்பு வைக்கும் நோக்குடன் தமிழீழ விடுதலைப் புலிகளால் அண்மையில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட விரிவான கொள்கை விளக்க அறிக்கையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம், விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தின் வரலாற்றுத் தோற்றம், வளர்ச்சிபற்றியும், அடிப்படையான அரசியல் குறிக்கோள்பற்றியும இவ்வறிக்கை எடுத்துவிளக்குவதுடன் சந்திரிகா அரசின் இனவாத அரசியற் தந்திரங்களையும், அந்தரங்க சூழ்ச்சிகர நோக்கங்களையும் அம்பலப் படுத்துகிறது.

## முன்னுரை

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக, அரசியல் வன்முறையின் எரியுலையாக இருந்து வருகிறது இலங்கை. இத்தீவு ''சுதந்திரம்'' பெற்றதையடுத்து, தமிழ் சிங்கள தேசங்கள் மத்தியில் எழுந்த முரண்நிலை படிப்படியாக முறுகலடைந்து, ஒரு முழு அளவிலான போராக விரிவாக்கம் கண்டிருக்கிறது. தமிழர் தேசத்தின் சுதந்திர இயக்கமாக விடுதலைப் புலிகளும் சிங்களத்தின் அடக்குமுறைச் சக்தியாக சிறீலங்கா அரசும் இப் போரில் பிரதான பாத்திரங்களை வகிக்கின்றன. நிலையான தேசிய இராணுவங்களைக் கொண்டிருக்கும் இவ்விரு தரப்பினர் மத்தியிலும் நீண்ட காலமாகக் கடும் போர் நிகழ்ந்துவருகிறது.

இப் போரின் விளைவுகள் கொடூரமானவை. ஒரு ஆக்கிரமிப்பு யுத்தமாக தமிழரின் தாயக மண்ணில் இப்போர் நிகழ்ந்துவருவதால், போரின் கொடிய விளைவுகளுக்கு தமிழ் மக்களே முகங்கொடுத்து வருகின்றனர். இந்த நீண்ட கொடிய யுத்தம் இதுவரை ஐம்பதினாயிரம் தமிழர்களின் உயிர்களைப் பலிகொண்டுள்ளது; உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமாக பல இலட்சம் மக்களை இடம்பெயர வைத்துள்ளது. இப் போர் இப்பொழுது என்றுமில்லாத வகையில் தீவிரமடைந்து தொடர்கிறது. உயிரழிவும் பொருளழிவுமாக, நாளுக்கு நாள், இப் போர் பெரும் நாசத்தை விளைவித்துவருகிறது.

இந்தப் போர் ஏன் நிகழ்கிறது? தமிழரின் அரசியல் பிரச்சினை ஆயுத வன்முறை வடிவம் எடுத்ததற்கான காரணங்கள் என்ன? விடுதலைப் புலிகள் எதற்காக ஆயுதமேந்திப் போராடுகிறார்கள்? இந்தக் கேள்விகளுக்கு சிறீலங்கா அரசு கொடுக்கும் விளக்கம் விசித்திரமானது. பரந்த பரிமாணத்தையுடைய மிகவும் சிக்கலான ஒரு நெருக்கடியை வெறும் பயங்கரவாதப் பிரச்சினையாக எளிமைப்படுத்தி, மலினப்படுத்த முனைகிறது அரசு. சிறீலங்காவின் இந்த அபத்தமான தர்க்கீகத்தில் விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாதக் குழுவாகவும், அவர்களது அரசியல் இலட்சியம் அராஜகவாதமாகவும் சித்தரிக்கப்படுகிறது. இந்தச் சித்தரிப்பின் அடிப்படையிலேயே அரசின் தீர்வும அதற்கான அணுகுமுறையும் அமையப்பெற்றிருக்கிறது. முழு அளவிலான போர்மூலம் விடுதலைப் புலிகளை அழித்துவிட்டால் பயங்கரவாதம் ஒழிந்துவிடும் என்பதும், பயங்கரவாதம் ஒழிந்துவிட்டால் தமிழரின் பிரச்சினை தானாகவே தீர்ந்துவிடும் என்பதும் அரசின் நிலைப்பாடு. இந்தக் குருட்டுத்தனமான அணுகுமுறையின் அடிப்படையில் தான் சிறீலங்கா அரசு செயற்பட்டுவருகிறது.

தமிழரின் தேசியப் போராட்டத்தை பயங்கரவாதப் பிரச்சினையாக உருவகப்படுத்தி உலகத்தை நம்பவைக்கும் நோக்குடன், மிகவும் நுட்பமாக, திட்டமிடப்பட்ட பிரச்சாரத்தை சிறீலங்கா அரசானது அனைத்துலக ரீதியாக மேற்கொண்டுவருகிறது. மேற்குலகமானது பயங்கரவாதத்திற்கு அஞ்சுகிறது; அதனை ஒரு உலகளாவிய அச்சுறுத்தலாகவும் கருதுகிறது. மேற்குலகின் இவ்வுணர்வலைகளை நன்கு அறிந்த சிறீலங்கா அரசானது, தனது நாடும் இதே அச்சுறுத்தலை எதிர்கொள்வதாக சர்வதேச சமூகத்தை நம்பவைக்க முனைகிறது. உள்நாட்டில் தலைவிரித்தாடும் இனச் சிக்கலை சர்வதேசப் பயங்கரவாதமாக பூச்சாண்டிகாட்டுவதில், சிறீலங்காவின் வெளிநாட்டுத் தூதரகங்கள் இரவுபகல் பாராது தீவிரமாகச் செயற்படுகின்றன. அரசியல் ஏமாற்றுவித்தையில் சாணக்கியராக விளங்கும் ஒரு தமிழ் அமைச்சரின் வழிநடத்தலில், இந்த விசமப் பிரச்சாரம் உலக ரீதியாக மேற்கொள்ளப்படுகிறது. தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக்கொச்சைப்படுத்தி, தமிழருக்கு எதிராகத் தமிழரின் தாயகத்தில் நிகழ்த்தப்படும் ஆக்கிரமிப்புப் போருக்கு அனைத்துலகின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெற்றுவிடுவதுதான், சிறீலங்காவின் நோக்கம். இதனால், இந்தப் போருக்கு கொழும்பு அரசு கொடுக்கும் விளக்கம் விநோதமானது. சிறீலங்காவின் ராஜரீக மொழியில் இப்போர் உன்னதமானது; சமாதானத்தை நோக்காகக்கொண்டது; பயங்கரவாதப் பிடியிலிருக்கும் தமிழருக்கு விடுதலையைத்தேடிக் கொடுக்கும் உயரிய இலட்சியத்தைக் கொண்டது. இவ்விதம் கொழும்பு அரசு மேற்கொண்டு வரும் பொய்ப் பிரச்சாரமானது தமிழரின் போராட்டம் பற்றி, குறிப்பாக ஆயுதப் போராட்டம் பற்றி சர்வதேச அரசியல், ராஜதந்திர அரங்கில் பெரும் குழப்பத்தையும் தப்பபிப்பிராயத்தையும் எழுப்பியுள்ளது. அத்துடன், இலங்கைத் தீவில் நீண்ட - முடிவில்லாத - கதையாக அரசியல் வன்முறை தொடர்கிறது. இராணுவ வன்முறையும் அதற்கு எதிரான ஆயுத வன்முறையுமாக தமிழரின் இனப் பிரச்சினை வன்முறைத் தீயாகக் கொழுந்துவிட்டு எரிகிறது. இந்த வன்முறைச் சூழலில், தமிழரின் அரசியல் போராட்ட வரலாறு பற்றி தெளிந்த – ஆழமான–பார்வை இல்லாமல், தமிழரின் ஆயுதப் போராட்டத்தின் நியாயப்பாடுகளைப் புரிந்துகொள்வது சிரமமானது. இத்தகைய சிக்கலான நிலைமையில் சிறீலங்கா அரசும் அரசியல் மெய்நிலையைத் திரிபுபடுத்திக் கூறிவருவதால், தமிழரின் ஆயுதந்தாங்கிய சுதந்திர இயக்கம் பற்றி, வெளியுலகத்தில் குழப்பமும் தவறான மதிப்பீடுகளும் எழுந்துள்ளன.

தமிழரின் ஆயுதப் போராட்டம் பற்றி எழுந்துள்ள குழப்ப நிலையைத் தெளிவுபடுத்தி, சரியான விளக்கங்களைத் தர முனைகிறது இக் கொள்கை விளக்கக் கட்டுரை. ஆயுதப் போராட்ட இயக்கம் தோற்றங்கொண்ட வரலாற்றுப் புறநிலைகளை எடுத்துவிளக்கும் அதேவேளை, இராணுவ அடக்குமுறைக்கும் இனக் கொலைக்கும் எதிராக ஆயுதமேந்திப் போராடும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு என நாம் வாதிடுகிறோம். விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்படும் ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதம் என முத்திரை குத்த முயற்சிக்கும் சிறீலங்கா அரசின் பொய்ப் பிரச்சாரத்திற்குப் பதிலளிப்பதுடன், ஆயுதப் போராட்டமானது தமிழரின் தன்னாட்சி உரிமைக்கான அரசியற் போராட்டம் என்பதை எடுத்து விளக்குகிறோம். ஒட்டுமொத்தத்தில், அரசியற் சுதந்திரமும் தன்னாட்சியும் வேண்டிநிற்கும் தமிழரின் போராட்ட நிலைப்பாட்டை இந்த அரசியல் ஆவணம் தெளிவாக முன்வைக்கிறது.



**தமிழர்கள் எதற்காக ஆயுதம் ஏந்தினார்கள் என்று ஆய்வு செய்தால், அதற்குப் பல வரலாற்றுக் காரணங்கள் உண்டு என்பதைக் கண்டு கொள்ளலாம். இனக்கொலை வடிவம் எடுத்த மிருகத்தனமான ஒடுக்குமுறையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேறு வழியில்லை என்பதாலும் சமாதான வழிமுறை தழுவிய ஜனநாயகப் போராட்டங்கள் ஈவிரக்கமின்றி ஆயுத வன்முறையால் அடக்கப்பட்டதாலும், அரசியலமைப்பு வழிகளும் நாடளுமன்றக் கதவுகளும் இறுக மூடப்பட்டதாலும், சமரசப் பேச்சுக்கள் மூலம் சமத்துவத்தையும் நீதியையும் வழங்க சிங்கள ஆட்சியாளர்கள் மறுத்துவிட்டதாலுமே தமிழர்கள் ஆயுதமேந்தத் துணிந்தார்கள். பல தசாப்தங்களாக சிங்கள இனவாதம் இழைத்த அநீதிகளதும் கொடுமைகளதும் வரலாற்றுக் குழந்தையாகவே தமிழ்மண்ணில் ஆயுதப்போர் பிறப்பை எடுத்தது.**

## தமிழர்கள் எதற்காக ஆயுதம் ஏந்தினார்கள்?

ஆயுதம்தரித்த விடுதலை இயக்கத்தின் எழுச்சிபற்றியும் வளர்ச்சிபற்றியும் ஆழமாக அறிந்துகொள்வதாயின், தமிழ் மக்களது தன்னாட்சி உரிமைப் [ சுயநிர்ணய உரிமை ] போராட்டத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்குடனேயே அதனை ஆய்வுசெய்ய வேண்டும். தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டமானது அரை நூற்றாண்டு கால படிமுறை வளர்ச்சியுடைய வரலாற்றைக்கொண்டது. அரசின் அடக்குமுறையும் அதற்கு எதிரான தமிழரின் கிளர்ச்சிப் போராட்டமுமாக இந்த வரலாறு விரிகிறது. ஆரம்ப காலகட்டங்களில் தமிழரின் போராட்டமானது அமைதி வழியில் அமைந்தது; சாத்வீக, சனநாயகப் போராட்ட வடிவங்களாக எழுச்சிபெற்றது. ஆனால், காலப் போக்கில் இராணுவ அடக்குமுறை தீவிரமடைந்து இனக்கொலைப் பரிமாணம் பெற்ற போது, தமிழரின் உரிமைப் போராட்டம் ஆயுதப் போர் வடிவம் எடுத்தது.

*1948 இல் பிரித்தானிய கொலனித்துவம் இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் வழங்கி - ஆட்சி அதிகாரத்தைப் பெரும்பான்மைச் சிங்களவரிடம் ஒப்படைத்த காலத்திலிருந்து, தமிழருக்கு எதிரான அரசின் ஒடுக்குமுறை தொடங்கியது.*

# புலிகளின் ஆயுதப் போரும் அரசியல் நோக்கும்: சர்வதேச சமூகத்திற்கு ஒரு உண்மை விளக்கம்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்றிலிருந்து மாறி மாறி ஆட்சிபீடம் ஏறிய சிங்கள அரசாங்கங்கள் திட்டமிட்ட முறையில் மேற்கொண்ட இன ஒடுக்குதல் சட்டங்களும் நடவடிக்கைகளும், தமிழரின் மொழியுரிமையை - கல்வியுரிமையை-வேலைவாய்ப்புரிமையைப்பறித்தெடுத்தன. படிப்படியாகத் தீவிரமடைந்த அரசின் ஒடுக்குமுறையானது தமிழரின் சமூக பொருளாதார வாழ்வை ஆழமாகப் பாதித்தது. இது ஒருபுறமிருக்க, அரசினால் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழரின் வரலாற்று மண்ணை பெருமளவில் ஆக்கிரமித்ததுடன், சனத்தொகை விகிதாசாரத்தை மாற்றியமைத்து, தமிழரின் பாரம்பரியப் பகுதிகளில் தமிழ் மக்களைச் சிறுபான்மையினராக்கியது. இவ்விதம் சிங்கள அரசின் ஒடுக்குமுறையானது தமிழரின் இன அடையாளங்களையே அழித்து வரும் நாசகார நோக்குடையதாக அமைநதது.


சிங்கள அரசின் ஒடுக்குமுறை மோசமடைந்து, தமிழரின் தேசிய தனித்துவத்திற்கு ஆபத்து எழுந்த சூழ்நிலையில், தமிழ் நாடாளுமன்ற அரசியற் தலைமை, வெகுசனப் போராட்டங்களில் குதித்தது; காந்தியின் அகிம்சைத் தத்துவத்தின் அடிப்படையில் மக்களை அணிதிரட்டி சாத்வீகப் போராட்டங்களை நடத்தியது. அறுபதுகளின் ஆரம்பத்தில் நிகழ்ந்த சத்தியாக்கிரகப் போராட்டமானது, சமுத்திரமாக சனங்களை ஈர்த்து அரசுக்கு எதிரான வெகுசனக் கிளர்ச்சியாக வெடித்தது. தேசிய எழுச்சியாக விஸ்வரூபம் எடுத்த தமிழரின் அமைதிவழிப் போராட்டங்களை சிங்கள அரசு மனிதாபிமானத்துடன் அணுகவில்லை; மாறாக, இராணுவ வன்முறையைப் பிரயோகித்து மிகவும் மிருகத்தனமாக ஒடுக்கியது.

அகிம்சை வழி தழுவிய அறப்போரின் ஆன்மீகப் பெறுமானத்தை சிங்கள இனவாதம் உணர்ந்துகொள்ளவில்லை என்பதை, தமிழ் மக்கள் புரிநதுகொண்டனர்; மனிதாபிமானமற்ற எதிரியின் ஆயுத வன்முறையை மென்முறைப் போரினால் எதிர்கொள்ள முடியாது என்பதையும் அறிந்துகொண்டனர். இதனால், தமிழ் மக்களுக்கு சாத்வீகப் போராட்டங்களில் நம்பிக்கை தளர்ந்தது. நாடாளுமன்ற அரசியல் முறையாலும் பயன் ஏதும் ஏற்படவில்லை. அது பெரும்பான்மையோரின் கொடுங்கோன்மையாக விளங்கியது. இந்த இக்கட்டான நிலையில், வேறு வழி தெரியாது, அன்றைய தமிழ்த் தலைமை சிங்களப் பேரினவாதத்துடன் பேச்சுக்களை நடத்திச் சமரசங்காண முனைந்தது. சமாதானப் பேச்சுக்கள் நடந்தன; இணக்கப்பாடுகள் காணப்பட்டன: உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. ஆனால், தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதை சிங்கள -பௌத்த பேரினவாதம் கடுமையாக எதிர்த்தது. இந்த எதிர்ப்புக்கு அஞ்சிய சிங்களத் தலைமைகள் ஒப்பந்தங்களை முறித்தன; உடன்பாடுகளைக் கிழித்து எறிந்தன.

1972ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த அரசியல் அமைப்புத் திட்டமானது, தமிழருக்கு எதிரான அரசின் அடக்குமுறையின் சிகரமாக அமைந்தது. இந்த அரசியல் யாப்பு சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்திற்கும் முதன்மையளித்து, சிங்கள - பௌத்த பேரினவாதத்தைச் சட்டரீதியாக நிறுவனப்படுத்தியது; அத்துடன் ஒற்றையாட்சி அரசியலிலிருந்து தமிழ்த் தேசத்தை ஓரங்கட்டியது. இந்த நிகழ்வானது தமிழரின் அரசியற் போராட்டத்தில் ஒரு புரட்சிகரமான - அடிப்படையான - மாற்றத்தைக் கொண்டு வந்தது.

இந்தப் பிரத்தியேக வரலாற்றுச் சூழலில் தான், தமிழ் மண்ணில் ஆயுதப் போராட்ட இயக்கம் பிறப்பை எடுத்தது. அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு அரசியற் சுதந்திரத்தை நிலைநாட்டவேண்டும் என்ற இலட்சிய வேட்கையுடன் இவ்வியக்கம் பிறந்தது. தமிழ் மக்களை அடக்கி ஆளவேண்டும் என்ற வக்கிர உணர்வுடன் சிங்கள அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறையின் எதிர்வினையாகவே, ஆயுதம் தரித்த புரட்சி இயக்கம் உருப்பெற்றது. எனவே, தமிழரின் தேசிய சுதந்திரப் போராட்டத்தின் விரிவாக்கமாகவும் வரலாற்று வளர்ச்சியாகவுமே ஆயுதப் போராட்டத்தைக் கொள்ளவேண்டும்.

தமிழர்கள் எதற்காக ஆயுதம் ஏந்தினார்கள் என்று ஆய்வு செய்தால, அதற்குப் பல வரலாற்றுக் காரணங்கள் உண்டு எனபதைக் கண்டுகொள்ளலாம். இனக்கொலை வடிவம் எடுத்த மிருகத்தனமான ஒடுக்குமுறையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேறு வழியில்லை என்பதாலும், சமாதான வழிமுறை தழுவிய ஜனநாயகப் போராட்டங்கள் ஈவிரக்கமின்றி ஆயுத வன்முறையால் அடக்கப்பட்டதாலும், அரசியலமைப்பு வழிகளும் நாடாளுமன்றக் கதவுகளும் இறுக மூடப்பட்டதாலும், சமரசப் பேச்சுக்கள்மூலம் சமத்துவத்தையும் நீதியையும் வழங்க சிங்கள ஆட்சியாளர்கள் மறுத்துவிட்டதாலுமே தமிழர்கள் ஆயுதமேந்தத் துணிநதார்கள். பல தசாப்தங்களாக சிங்கள இனவாதம் இழைத்த அநீதிகளதும் கொடுமைகளதும் வரலாற்றுக் குழநதையாகவே, தமிழ் மண்ணில் ஆயுதப் போர் பிறப்பை எடுத்தது.



## தன்னாட்சி உரிமைக்கான ஆயுதப் போராட்டம்

1972ஆம் ஆண்டு, எமது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, தமிழரின் அரசியற் போராட்ட வடிவத்தில் அடிப்படையான ஒரு மாற்றம் நிகழ்ந்தது. தமிழரின் அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக ஆயுதம் தரித்த கெரில்லா இயக்கம் ஒன்று தோற்றம் எடுத்து, அரசின் வன்முறைக்குச் சவால்விடுத்து, தமிழரின் அரசியல் உரிமைகளுக்காக ஆயுதமேந்திப் போராடத் துணிந்தது. விடுதலைப் புலிகளின் தோற்றத்துடனும் வளர்ச்சியுடனும் ஆயுதப் போராட்டமானது தமிழரின் அரசியற் போராட்டமாக உயர் பரிமாணம் பெற்று, அமைப்புரீதியாகப் பலம்பெற்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டமானது, தெளிவாக வரையறுக்கப்பட்ட அரசியற் கொள்கைத் திட்டத்தில் அமையப்பெற்றிருக்கிறது. தமிழ் மக்களது தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதுதான், விடுதலைப் புலிகளது அரசியற் கொள்கையின் அடிப்படை இலட்சியமாகும். தன்னாட்சி உரிமைக் கோட்பாடானது, ஒரு தேசிய இனமான மக்கள் சமூகத்தின் அரசியற் சுதந்திரத்தை வலியுறுத்துகிறது. இந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே தமிழ் மக்கள் தமது தாயகத்தின் அரசியற் சுதந்திரம்வேண்டிப் போராடி வருகிறார்கள். ஈழத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனக் கட்டமைப்பையுடைய மக்கள் சமூகமாக அமையப்பெற்றிருக்கிறார்கள் என்பதும், அவர்களுக்கு வரலாற்று ரீதியான தாயகம் உண்டென்பதும், இத் தாயகமானது வடக்கு கிழக்கு மாகாணங்களடங்கிய தொடர்ச்சியான நிலப்பரப்பையுடையது என்பதும் விடுதலைப் புலிகளது நிலைப்பாடாகும். தமிழர்களுக்கு ஒரு தனித்துவமான தாயகப் பூமியும், தனிச் சிறப்பையுடைய மொழியும், பண்பாடும், பொருண்மிய வாழ்வும், மூவாயிரம் ஆண்டுகளாக விரியும் நீண்ட வரலாறும் இருப்பதால், அவர்கள் ஒரு தேசியக் கட்டமைப்பிற்கான சகல பண்புகளையும் கொண்டு விளங்கும் ஒரு மக்கள் சமூகமாகும். இவ்விதமான ஒரு தேசிய மக்கள் சமூகம் என்ற வகையில் அவர்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்துடையவர்கள். இத் தன்னாட்சி உரிமை என்பது ஒரு மக்கள் சமூகம் தனது அரசியற் தலைவிதியைத் தானே நிர்ணயித்துக்கொள்ளும் சுதந்திரமாகும். 1977ஆம் ஆண்டு நிகழ்ந்த பொதுத் தேர்தலில், தமிழ் மக்கள் தமக்கே உரித்தான தன்னாட்சி உரிமையைப் பிரகடனம் செய்து- ஒரு சுதந்திரமான தனியரசை அமைப்பதற்குப் போராட முடிவெடுத்தார்கள் என்பதும் விடுதலைப் புலிகளது நிலைப்பாடாகும். தன்னாட்சி உரிமையை நிலைநாட்ட தமிழ் மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையிலேயே, விடுதலைப் புலிகளின் தேசிய விடுதலைப் போராட்டம் அமைந்திருக்கிறது.

தமிழர் தேசத்திற்கு சுதந்திரம் வென்றெடுக்கும் புலிகளின் இலட்சியமானது, தனிப்பட்ட முறையில் - தன்னிச்சையாக - எடுக்கப்பட்ட முடிவல்ல; மாறாக, அனைத்துத் தமிழ் மக்களினதும் ஏகோபித்த அபிலாசையை - முழுத் தேசத்தினதும் விருப்பாற்றலை - நிறைவு செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும். பல தசாப்தங்களாக அந்நிய ஆதிக்கத்திற்கும் அடக்குமுறைக்கும் ஆளாகியிருந்த தமிழினம், சனநாயக வழிமுறை வாயிலாக, தனக்கு உரித்தான தன்னாட்சி உரிமையைப் பிரயோகிக்க முடிவெடுத்தது இத் தன்னாட்சி உரிமையானது ஐ. நா. சாசனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகளாவிய பொது மனித உரிமை விதியாகும். ஐ. நா. சாசனத்து நியமங்கள் தன்னாட்சி உரிமைக்கு கீழ்க்கண்ட வரைவிலக்கணத்தைக் கொடுக்கிறது: ''எல்லா மக்கள் சமூகத்தினரும் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். இந்த உரிமையின்கீழ் அவர்கள் தமது அரசியற் தகுநிலையைத் தாமாகவே சுதந்திரமாகத் தீர்மானிக்கலாம். அத்துடன் தமது பொருண்மிய, சமூக, பண்பாட்டு வாழ்வை மேம்படுத்தும் வழிமுறைகளையும் அவர்கள் சுதந்திரமாகக் கடைப்பிடிக்கலாம்.''

ஒரு பொதுசன வாக்கெடுப்பாக நிகழ்ந்த 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில், தமிழ் மக்கள் தமது அரசியற் தகுநிலையை தாமாகவே தீர்மானித்துக்கொண்டார்கள். அதாவது, பிரிந்து சென்று தமது தாயகத்தில் இறைமையுடைய ஒரு தனியரசை அமைப்பதென முடிவெடுத்தார்கள். தனியரசை அமைத்துத் தருவதாக உறுதியளித்து தமிழ் மக்களிடமிருந்து ஒரு தெளிவான ஆணையைப்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வாக்குறுதியை நிறைவேற்றத் தவறி, தமிழினத்திற்குத் துரோகம் இழைத்தது. ஆனால், விடுதலைப் புலிகளோ தமிழினத்தின் ஆணையை ஏற்று, தமிழரின் தேசிய அபிலாசையை நிறைவுசெய்யும் நோக்குடன், தன்னாட்சி உரிமைக்காக இரத்தம் சிந்திப் போராடிவருகிறார்கள்.

சிறீலங்கா அரசானது தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையை விடாப்பிடியாக மறுத்து வருகிறது; தமிழரை ஒரு மக்கள் சமூகமாகவும் ஏற்க மறுக்கிறது பல்லினக் கோட்பாட்டை வலியுறுத்தும் சிங்கள ஆட்சிபீடம் தமிழரை ஒரு சிறுபான்மை இனக் குழுவாகச் சித்தரித்து, தமிழரின் தாயகத்தையும் தேசியத்தையும் நிராகரித்து வருகிறது; அதேசமயம், அரசியல் அமைப்பில் திருத்தம் செய்து தன்னாட்சி உரிமைக் கோரிக்கையையும் சட்ட விரோதமானதாக ஆக்கியுள்ளது. இது ஒருபுறமிருக்க, தமிழர்கள் மீது முழு அளவிலான போரை ஏவிவிட்டு அவர்களது அரசியற் சுதந்திரப் போராட்டத்தையும் நசுக்க முனைகிறது: அத்துடன், தமிழரின் தன்னாட்சி உரிமையை வென்றெடுக்க ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகளை இனவாதிகள், பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள் என அவதூறாக கண்டித்தும் குற்றஞ்சாட்டியும் வருகிறது.

## சர்வதேச அங்கீகாரம்

சர்வதேச ராஜதந்திர அரங்கில் சிறீலங்கா அரசு மேடையேற்றிவரும் மிகவும் அபாண்டமான பொய்ப்பிரச்சாரத்தின் பின்னணியில், தமிழ் மக்களும் தமது தன்னாட்சி உரிமைப்

# புலிகளின் ஆயுதப் போரும் அரசியல் நோக்கும்: சர்வதேச சமூகத்திற்கு ஒரு உண்மை விளக்கம்.

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தின் நியாயப்பாடுகளை விளக்கி, உலகெங்கும் தீவிரமான பரப்புரைகள் செய்து வருகின்றனர். இனக்கொலை வடிவத்தில் பேயுருவம் எடுத்துள்ள அரசப் பயங்கரவாதத்திற்கு எதிராக, தற்காப்புக் கருதி ஆயுதம் ஏந்திப் போராடும் உரிமை தமக்குண்டு எனவும் அவர்கள் வாதாடி வருகிறார்கள்.

ஈழத் தமிழரின் தன்னாட்சி உரிமைக்கு அங்கீகாரம் வேண்டி தமிழ் மக்கள் மேற்கொண்டு வரும் சர்வதேச பிரச்சார இயக்கம், ஐ. நா. சபையின் முக்கிய நிறுவனமான ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவில், கடந்த பல ஆண்டுகளாக சூடுபிடித்து வருகிறது. தமிழரின் தன்னாட்சி உரிமைக் கோரிக்கை நியாயமானதும் சட்டரீதியானதுமென, ஐ. நா. அந்தஸ்துப் பெற்ற அரச சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் வாதாடி வருகின்றன. தமிழரின் கோரிக்கையை ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு அங்கீகரிக்க வேண்டுமெனவும் இந் நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துவருகின்றன.

1993 ஆம் ஆண்டு பெப்ரவரியில், ஐ. நா. மனித உரிமைக் குழுவின் 49ஆவது மாநாட்டில், அரசு சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் பல கூட்டாக விடுத்த அறிக்கை ஒன்றில், தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தன. ''கொலனித்துவம் அல்லது அந்நிய ஆதிக்கம் அல்லது அந்நியப் படையெடுப்பின் கீழ் வாழும் மக்களின் தன்னாட்சி உரிமையும் அதன் பிரயோகமும்'' என்ற தலைப்பில் நிகழ்ந்த இம் மாநாட்டில் விடுக்கப்பட்ட இக் கூட்டறிக்கை, கீழ்க்கண்டவாறு எடுத்துக் கூறுகிறது:

''வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழ் மக்கள், பல நூற்றாண்டுகளாக, தெளிவாக வரையறுக்கப்பட்ட புவியியல் எல்லைகளையுடைய பிரதேசத்தில் வாழ்ந்துவருகிறார்கள் பழம்பெரும் மரபும், வரலாறும், சீரிய பண்பாடும், 2500 ஆண்டுகளுக்கு மேலாக மூலவேர் பதித்திருக்கும் ஒரு உயிருள்ள மொழியும் அவர்களுக்கு உண்டு, தெளிவாக வரம்பிடப்பட்ட ஒரு மாநிலத்தில். வாழ்வால் ஒன்றுபட்ட இனவுணர்வுப் பிரக்ஞையுடன் ஒரு சமூகக் கட்டமைப்பாக வாழும் இம் மக்கள், அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடி வருகிறார்கள். இவர்கள் ஒரு மக்கள் சமூகமாக அமையப் பெற்றிருக்கிறார்கள். இம் மக்களுக்கு தன்னாட்சி உரிமையுண்டு. இலங்கைத் தீவின் வடக்கு – கிழக்கில் வாழும் தமிழர்களை ஒரு மக்கள் சமூகமாக ஏற்று, அவர்கள் தமது அரசியல் தகுநிலையை தாமே தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளவர்கள் என்பதைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டிய ஒரு அவசரத் தேவை இன்று எழுந்துள்ளது ''

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாநிலத்தைத் தமிழரின் தாயகமாக ஏற்று, தமிழரின் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கக் கோரி ஐ.நாவுக்கு அறிவுரை வழங்கும் தகுதியுடைய அரசு சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் கூட்டாக விடுத்த இவ்வறிக்கையானது, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச அரங்கில் கிடைத்த ஒரு வெற்றி என்பதில் ஐயமில்லை; தமிழரின் சர்வதேசப் பிரச்சார இயக்கத்திற்கும் இதுவொரு முன்னேற்றகரமான திருப்பமாகவும் அமைந்தது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு இன்று வரை, பாரதூரமான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை என்பது உண்மை. எனினும், தன்னாட்சி உரிமையின் அடிப்படையில், தமிழரின் நியாயபூர்வமான தேசிய அபிலாசைகளைப் பூர்த்திசெய்ய உருப்படியான நடவடிக்கைகளை எடுக்குமாறு, கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவிடம் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுவருகின்றன. ஒவ்வொரு ஆண்டும், தமிழருக்கு எதிரான சிங்கள அரசின் ஆக்கிரமிப்புப் போர் தீவிரமடைந்து தமிழரின் நிலை மோசமடைந்து வருவதால், தமிழரின் உரிமைக் குரல் ஐ.நா. அரங்குகளில் மேலோங்கி வருவதைக் காணலாம்.

ஆரம்பத்தில், தன்னாட்சி உரிமைக் கோட்பாடானது, கொலனித்துவ ஆட்சிக்கு எதிராக தேச சுதந்திரம் கோரி நடாத்தப்பட்ட விடுதலைப் போர்ராட்டங்களுக்கே பயன்படுத்தப்பட்டது. ஆனால், சமகால வரலாற்றுச் சூழலில் இக் கோட்பாடானது, பல்வேறு ஒடுக்குமுறை வடிவங்களுக்கு எதிராகப் போராடும் மக்களின் உரிமைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, இனவாத அரசுகளின் அடக்குமுறை அல்லது அந்நிய ஆதிக்கம் அன்றி அந்நிய படையெடுப்பு போன்ற ஒடுக்குமுறைகளைச் சந்தித்து நிற்கும் மக்களுக்கும் இந்த உரிமை உரித்தாகிறது. இங்கு, அந்நிய ஆதிக்கம் என்பது, ஒரு தேசத்தின்மீது இன்னொரு தேசம் திணிக்க முயலும் ஆதிக்கத்தையே குறிக்கிறது.

தமிழ் மக்கள் சிங்கள இனவாத அரசின் அடக்குமுறைக்கு ஆளாகிநிற்கிறார்கள். அந்நிய தேசமான சிங்களத்தின் இராணுவ ஆதிக்கத்திற்கும் படையெடுப்பிற்கும் உட்பட்டு நிற்கிறார்கள். ஆயுத பலத்தால் தமிழ் மக்களை அடிமைப்படுத்தி அவர்களை சிங்கள இராச்சியத்துடன் பலவந்தமாக இணைத்துவிட, மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் விடாப்பிடியாக மூனைந்துவருகின்றன என்பது வரலாற்று உண்மை. இந்த வரலாற்று உண்மை சந்தேகத்திற்கு இடமின்றி ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்நிய ஆதிக்கத்தையும் இனவாத அடக்குமுறையையும் தெளிவுற நிரூபிக்கும் உண்மைச் சம்பவம் இது. இந்த வகையில், சர்வதேசச் சட்டத்தின் நியமங்களையும் வரையறைகளையும் தமிழர்கள் பூர்த்திசெய்வதால், அவர்களுக்கு தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தும் தகுதியுண்டு; தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு ஆயுதம் ஏந்திப் போராடும் உரிமையும் உண்டு. இன்னொரு வகையில் சொல்லப் போனால், தமிழர்களது ஆயுதப் போராட்டமானது சர்வதேச சட்டத்தின்படி ஒரு நியாய பூர்வமான அரசியற் போராட்டமாகும்.

## விடுதலைப் புலிகள் ஒரு விடுதலை இயக்கம்

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டும் இலட்சியத்துடன், விடுதலைப் புலிகள் இயக்கமானது, சிங்கள அரசின் இராணுவ ஆதிக்கத்திற்கு எதிராக ஆயுதந்தரித்த விடுதலைப் போரை நடத்திவருகிறது. தன்னாட்சி உரிமைக் கோரிக்கையில் தளராத உறுதிபூண்டு, நீண்டகாலமாக தமிழரின் அரசியல் சுதந்திரத்திற்காக இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் போராடி வருவதால், விடுதலைப் புலிகள் இயக்கமானது ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற தகுதியைப் பெற்றிருக்கிறது. எழுபதுகளின் ஆரமபத்தில் உதயம்பெற்று, இரு தசாப்தங்களுக்கு மேலாக தமிழரின் போராட்ட சக்தியாக இரத்தம் சிந்தும் இலட்சியப் போர் புரிந்து- அதியுயர் அர்ப்பணிப்புகளைச் செய்துவருவதால், தமிழீழ மக்கள் மத்தியிலும் அனைத்துலக தமிழர் மத்தியிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் பரந்துபட்ட நல்லாதரவைப் பெற்றிருக்கிறது. தமிழரின் தேசிய இனப் பிரச்சினை சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெற்றமைக்கு புலிகளின் விடுதலைப் போராட்டமே பிரதான காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது.



விடுதலைப் புலிகள் இயக்கமானது பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும் ஒரு சிறிய– ஆயுதம் தாங்கிய - கிளர்ச்சிக்காரக் குழு என்றும், புலிகள் இயக்கம் தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நிற்பதாகவும் சிறீலங்கா அரசு அடிக்கடி வலியுறுத்தும் கருத்து உண்மைக்கு மாறான விசமப் பிரச்சாரமாகும். விடுதலைப் புலிகளுக்கு பரந்துபட்ட மக்களின் நல்லாதரவுண்டு என்பதை நிரூபிப்பதற்கு, அவர்களது நீண்ட – 25 வருடகால – அரசியல் இராணுவ வரலாறே போதுமானது ஆயுதந்தாங்கிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் கெரில்லா இயக்கங்கள் மக்கள் ஆதரவின்றி நிலைத்திருக்க முடியாது என்பது, வரலாற்றில் பதிவாகிய உண்மை. ஒரு நீண்ட வரலாறும், பலம்மிக்க இராணுவ சக்திகளுடன் ( இந்திய இராணுவம் உட்பட) தளராத உறுதியோடு போர் நிகழ்த்தும் வல்லமையும், அரசியல் நடவடிக்கைகளில் அலையலையாக சனத்திரளை அணிதிரட்டும் ஆற்றலும், விடுதலைப் புலிகளை ஒரு தேசிய சுதந்திர இயக்கம் என்ற அந்தஸ்திற்கு உயர்த்தியுள்ளன. விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் ஒரு நிலையான இராணுவம் உள்ளது. பல்லாயிரம் விடுதலைப் போராளிகளைக் கொண்ட ஒருதேசிய விடுதலைப் படையாக அது இயங்குகிறது. இந்த விடுதலை இராணுவத்திற்கு ஒரு கட்டளைத் தலைமையும், உயர் இராணுவ பயிற்சி வசதிகளும், நவீன படைக்கலன்களும், பரந்த கட்டுப்பாட்டுப் பிரதேசங்களும், சிங்கள ஆயுதப்படைகளுடன் மரபுவழிப் போரில் சண்டையிடும் வல்லமையும் ஆற்றலுமுண்டு. விடுதலைப் புலிகளிடம் ஒரு அரசியல் அமைப்பும் உண்டு. அதன் கீழ் சமூக, பொருண்மிய, கல்வி, பண்பாட்டுப் பிரிவுகள் செயற்படுகின்றன. விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சட்டம் ஒழுங்கையும், நீதி பரிபாலனத்தையும், சிவில் நிர்வாக அலகுகளையும் செயற்படுத்தி வருகின்றனர். பல்முகக் கூட்டமைப்பான ஒரு கட்டமைப்பைக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருபுறம் ஆயுதப் போராட்டத்தையும், மறுபுறம் அரசியற் போராட்டத்கையும், இன்னொரு புறம் சிவில் நிர்வாகத்தையும் செயற்படுத்தும் இலக்கைக்கொண்டதாக அமையப்பெற்றிருக்கிறது; அத்தோடு, உலகத்தின் தலைநகரங்களில் செயற்படும் ஒரு பரந்த சர்வதேச அமைப்பும் புலிகளிடமுண்டு.

தமிழரின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு தேசிய விடுதலை இயக்கமாக விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ள, சிறீலங்கா அரசு அன்றிலிருந்து இன்றுவரை விடாப்பிடியாக மறுத்து வருகிறது. அவ்விதம் ஏற்றுக்கொள்வது தமிழரின் போராட்டத்தை ஒருதேசிய விடுதலைப் போராட்டமாக அங்கீகரிப்பதாக முடியுமென, சிங்கள அரசு அஞ்சுகிறது. பல தசாப்தங்களாக தமிழர்களின் உரிமைகளைப் பறித்து, தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, தமிழருக்கு நீதி வழங்குவதை மறுத்து வரும் ஒரு இனவாத அரசிடம் யாருமே உண்மையையும் நேர்மையையும் எதிர்பார்க்க முடியாது. தமிழரின் தேச சுதந்திர இயக்கத்தைச் சிறுமைப்படுத்துவதிலும், கொச்சைப்படுத்துவதிலும், இழிவுபடுத்துவதிலுமே சிறீலங்காவின் பாரிய பிரச்சார இயந்திரம் தீவிரமாகச் செயற்பட்டுவருகிறது. சிங்கள ஆட்சியாளரின் குருட்டுத்தனமான இனவாதப் பார்வையில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பாகவும், தமிழரின் சுதந்திரப் போராட்டம் பயங்கரவாதிகளின் போராகவும் திரிபுபடுத்தப்படுகிறது.

மிகவும் கடுமையான இனவாத நிலைப்பாட்டை எடுத்து விடுதலைப் புலிகளை மிகவும் இழுக்கான வார்த்தைகளில் தூற்றிவந்தபோதும், சிங்களத் தலைமைகள், வெவ்வேறு காலகட்டங்களில், பல்வேறு சூழ்நிலைகளில், புலிகளைத் தமிழரின அரசியல் – இராணுவ சக்தியாக ஏற்று அவர்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டியிருந்தது. திம்புவிலும், டெல்லியிலும், பெங்களூரிலும், கொழும்பிலும், சமீபத்தில் யாழ்ப்பாணத்திலுமாக சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியது. எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி, விடுதலைப் புலிகளை தமிழரின் அரசியற் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டே இந்தப் பேச்சுக்களில் சிறீலங்கா பங்குபற்றியது. இவ்விதம் பேச்சுக்களின்போது புலிகளுக்கு வழங்கப்படும் அங்கீகாரம், பேச்சுக்கள் முறியும்போது நீக்கப்பட்டுவிடுகிறது! சமாதான காலத்தில் புலிகளை மக்கள் இயக்கமாக அங்கீகரிப்பதும், பின்பு

# புலிகளின் ஆயுதப் போரும் அரசியல் நோக்கும்: சர்வதேச சமூகத்திற்கு ஒரு உண்மை விளக்கம்.

போர்க் காலத்தில் அவர்களைப் பயங்கரவாத இயக்கமாக இழிவுபடுத்துவதும் சிறீலங்காவின் மிகவும் விசித்திரமான – கேலிக்கூத்தான – அரசியல் நாடகம் என்பதை, சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.

## சிறீலங்கா அரசின் அந்தரங்க நோக்கங்கள்

1983 ஆம் ஆண்டு ஜூலையில் வெடித்த இனவாதப் பூகம்பத்தில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து, தமிழரின் தேசிய இனப் பிரச்சினை சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெற்றது. சிறீலங்காவின் படுபாதகமான மனித உரிமை மீறல்களைக் கண்டு, சர்வதேச சமூகம் அதிர்ச்சியடைந்தது. இந்தக் கொடிய இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்கள், பெரும் தொகையில், மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற பிற தேசங்களில் அரசியற் தஞ்சம் புகுந்தனர். இதனையடுத்து, அபிவிருத்தி கண்ட செல்வந்த நாடுகளின் அக்கறையும் கவனமும் இலங்கைத் தீவின் அரசியல் மீது திரும்பியது, தமிழரின் நிலைகுறித்துக் கவலையடைந்த மேற்குலக நாடுகள் சில, சிறீலங்காவிற்கு வழங்கும் நிதியுதவியை மனித உரிமைப் பிரச்சினையுடன் தொடர்புபடுத்தி, மனித உரிமையை மேம்பாடு செய்வதன் அடிப்படையில் உதவி வழங்கப்படுமென வலியுறுத்திவந்தன. ஆயினும், மேற்குலகின் இந்த அழுத்தங்கள் எவ்வித பயனையும் அளிக்கவில்லை. சிறீலங்காவின் ஒடுக்குமுறை ஆட்சியில் எவ்வித மாற்றங்களும் நிகழவில்லை. எனினும், தற்போதைய சிங்கள அரசாங்கம், சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நோக்குடன் விசாரணைக் குழுக்களையும் மனித உரிமை ஆணைக்குழுக்களையும் நியமித்து, சில கண்துடைப்பு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. ஆனால், இலங்கைத் தீவானது தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தின் கீழும், "பயங்கரவாத சட்டத்தின் கீழும், இராணுவ–பொலிஸ் கொடுங்கோன்மையின் கீழும் ஆளப்பட்டுவருகிறது என்பதுதான் உண்மை தென்னிலங்கையில் அரசுக்கு எதிரான சக்திகள் காவல்துறையினரின் பயமுறுத்தல், கைது, தடுப்புக்காவல், தாக்குதல் போன்ற கொடுமைகளைச் சந்தித்து வருகின்றன. அங்கு அரசியல் சுதந்திரங்களை நசுக்கிவிட அரசாங்கம் இரும்புக் கரத்தைப் பாவிக்கிறது. வட - கிழக்கில் நிலைமை படுமோசமாக உள்ளது. இங்கு, இராணுவ நடவடிக்கைகள் என்ற போர்வையில் தமிழருக்கு எதிராக மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல்களும், போர்க் குற்றங்களும் இழைக்கப்படுகின்றன. இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் திறந்தவெளிச் சிறைச்சாலைகளாக மாற்றப்பட்டு, கைதுகளும் காவல்வைப்பும், காணாமல் போதலும், சித்திரவதையும், பாலியல் வல்லுறவும், கொலைகளுமாக மிகவும் மிருகத்தனமான இராணுவப்பயங்கரவாத ஆட்சி நடைபெறுகிறது. யாழ்ப்பாணத்தில் மட்டும் 500 பேருக்கு மேல் காணாமல் போயுள்ளதாக, நன்கு ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.



மனித உரிமை நிலைமை படுமோசமாகி, போரும், வன்முறையும், அடக்குமுறையுமாக இலங்கையில் கொந்தளிப்பான நிலை தாண்டவமாடும்போது, உதவி வழங்கும் நாடுகள் தொடர்ந்தும் சிறீலங்காவுக்குப் பாரிய அளவில் நிதியுதவியை வாரிவழங்கிவருகின்றன. இந்த நிதியில் பெரும் பகுதி அரசாங்கத்தின் "சமாதானத்திற்கான போருக்கு" செலவாகிவருகிறது. மனித உரிமையோடு நிதியுதவியைத் தொடர்புபடுத்திய செல்வந்த நாடுகள், அந்த அழுத்தத்தைப் பிரயோகிக்கத் தயக்கம் காட்டுவதால், அது சந்திரிகா அரசாங்கத்திற்கு ஊக்கத்தை அளித்திருப்பதுடன், அவரது கொடூரமான ஒடுக்குமுறை ஆட்சியை நீடிக்கவும் வழிகோலியுள்ளது. இது ஒருபுறமிருக்க, போரினால் எழுந்த மாபெரும் மனித அவலங்களைக் கருத்தில எடுக்காது, மனிதாபிமான உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், சில வெளிநாடுகள் சிறீலங்காவுக்கு தொடர்ந்தும் அழிவு ஆயுதங்களை வழங்கிவருகின்றன. உலகத்திடமிருந்து பெருந்தொகையில நிதியுதவியும், பெருமளவில் ஆயுத உதவியும் குவிந்து வருவதால் உற்சாகம் பெற்றிருக்கும் சிங்கள அரசு, தமிழருக்கு எதிராக ஈவிரக்கமற்ற இராணுவ அடக்குமுறைக் கொள்கையை நடைமுறைப்படுத்திவருகிறது. இதே சமயம், போர் விரிவடைந்து தீவிரமாகி தமிழரின் தேசியப் பிரச்சினை மேலும் மோசமாகி வருவதையிட்டுக் கவலைப்படும் வெளிநாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. நெருக்கடியில் பிரதான பாத்திரங்களை வகிக்கும் விடுதலைப் புலிகளும் சிறீலங்கா அரசும் சமாதானப் பேச்சுக்களை நடத்தி – ஒரு அரசியல் தீர்வைக் காணவேண்டுமென, இந்நாடுகள் ஆலோசனை கூறிவருகின்றன. விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் மத்தியில் பரஸ்பரம் அவநம்பிக்கையும் பகைமையும் இருப்பதாலும், இருதரப்பினர் மத்தியில் நிகழ்ந்த நேரடிப்பேச்சுக்கள் முறிந்து போனதாலும், பேச்சுக்களுக்கு மத்தியத்துவம் வகிக்க அல்லது பேச்சுக்களுக்கு வசதிசெய்து கொடுக்க சில நாடுகள் முன்வந்துள்ளன. நோர்வே, சுவீடன், கனடா, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகள் மத்தியத்துவத்திற்கு விருப்புத் தெரிவித்துள்ளன. மூன்றாம் தரப்பு சர்வதேச மத்தியத்துவத்தை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமை வரவேற்றபோதும், சிறீலங்கா அரசு அதற்கிணங்க மறுக்கிறது; தமிழரின் இனப் பிரச்சினை ஒரு உள்நாட்டு விவகாரம் எனக் கூறி, சர்வதேச மத்தியத்துவததை நிராகரித்து வருகிறது.

சிறீலங்கா அரசானது சர்வதேச மத்தியத்துவத்தை மறுத்து வருவதற்குச் சில அடிப்படையான காரணங்களுண்டு. முதலாவதாக, தமிழரின் தேசிய பிரச்சினை உலக அரங்கில் ஏறி, சர்வதேச நெருக்கடிகளில் ஒன்றாகக் கருதப்படுவதை சந்திரிகாவின் அரசாங்கம் விரும்பவில்லை. இரண்டாவதாக, தமிழர் போராட்டத்தின் பிரதான கதாநாயகனாக விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அந்தஸ்து கிடைப்பதை சிங்கள அரசு விரும்பவில்லை. மூன்றாவதாக, தமிழரின் தன்னாட்சிக் கோரிக்கை நியாயமானதென நாகரிக உலகம் அனுதாபம் காட்டலாம் என்ற அச்சமும் சிறீலங்காவுக்கு உண்டு. நான்காவதாக, சமாதான முயற்சிகளுக்குப் பதிலாக இராணுவப் பாதையையே கொழும்பு அரசு விரும்புகிறது. தமிழரின் தாயகத்தை ஆக்கிரமித்து, தமிழரை அடக்கி ஆளும் இராணுவக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன்மூலமே சிங்கள – பௌத்த பேரினவாதத்தைத் திருப்திப்படுத்தி அதன் ஆதரவை வென்றெடுக்கலாமென அரசு கருதுகிறது.

இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டமானது, சிங்கள அரசுக்கும் புலிகளுக்கும் மத்தியில் பரஸ்பர பகைமையையும் நம்பிக்கையீனத்தையும் உருவாக்கியிருக்கிறது என்பது உண்மை. இருதரப்பினர் மத்தியில் நிகழ்ந்த பேச்சுக்கள் முறிவடைந்ததற்கு இந்தப் பரஸ்பர பகைமையும் நம்பிக்கையீனமுமே காரணம். இதன் காரணமாகவே, எதிர்காலத்தில் சர்வதேச மத்தியத்துவத்தின்கீழ் பேச்சுக்கள் நடைபெறுவது பயனளிக்குமென விடுதலைப் புலிகள் இயக்கம் நம்புகிறது. ஆனால் சிறீலங்கா அரசு, நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டிய காரணங்களின் நிமித்தம் மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தை விரும்பவில்லை. விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு சிங்கள அரசு பின்னடிப்பதற்கு, வேறும் சில காரணங்களுண்டு.

தற்போதைய சிங்கள அரசாங்கம், சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நோக்குடன் விசாரணைக் குழுக்களையும் மனித உரிமை ஆணைக்குழுக்களையும் நியமித்து, சில கண்துடைப்பு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. ஆனால், இலங்கைத் தீவானது தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தின் கீழும், இராணுவ - பொலிஸ் கொடுங்கோன்மையின் கீழும் ஆளப்பட்டுவருகிறது என்பதுதான் உண்மை.

சிங்கள இனவாத ஆட்சியாளரின் பார்வையில் விடுதலைப் புலிகள் ஒரு தீவிரவாத இயக்கம். தமிழரின் தனித்துவம், தாயகம், தேசியம் என்ற தமிழினத்தின் ஒட்டுமொத்தமான விருப்பாற்றலைக் குறியீடு செய்துநிற்கும் ஒரு புரட்சிகர இயக்கமாக விடுதலைப் புலிகளை இவர்கள் கருதுகிறார்கள். ஏனைய தமிழ்க் குழுக்கள், தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளைக் கைவிட்டு, எந்தச் சலுகைகளையும் ஏற்கத் தயாராக இருக்கும்பொழுது, விடுதலைப் புலிகள் மட்டும், கொண்ட இலட்சியத்தை இறுகப்பற்றி தமிழரின் தேசிய அபிலாசைகளை வென்றெடுப்பதில் உறுதியாக நிற்கிறார்கள் என்பதையும், சிங்கள ஆளும் வர்க்கம் நன்கு உணர்ந்திருக்கிறது. ஆகவே, புலிகளுடன் பேசுவதாயின் தமிழர் பிரச்சினையின் அடிப்படைகள் பற்றிப் பேசவேண்டும். ஆனால், இந்த அடிப்படைகள் பற்றி விவாதிக்கக்கூட சிங்கள ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. தமிழர்களின் தேசிய அபிலாசைகளையும் உணர்வுகளையும் முற்றாக உதாசீனம் செய்து, பிறிதொரு அரசியற் கருத்துலகில் தமிழரின் பிரச்சினையை நிலைநிறுத்த முனைகிறார்கள். இலங்கையானது பல இனக் குழுக்களைக்கொண்ட ஒரு சமூகக் கட்டமைப்பு என்பதும், அதில் ஒரு சிறிய இனக் குழுவாக தமிழர்கள் அமைந்துள்ளார்கள் என்பதும், இதன் அடிப்படையில் தேசிய தனித்துவம், தாயகம் என்ற தமிழரின் கோரிக்கைகளை ஏற்க முடியாது என்பதும் சிறீலங்காவின் நிலைப்பாடு. இந்த நிலைப்பாடு காரணமாகவே, நேரடியாகவோ அன்றி மூன்றாம் தரப்பு நடுநிலையுடனோவிடுதலைப் புலிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்த, சிங்கள ஆட்சிபீடம் தயக்கம் காட்டுகிறது. விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக ஓரங்கட்டிவிடுவதே அரசின் நோக்கம். தற்போதைய இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இந்த நோக்கத்தையே சுட்டிக் காட்டுகின்றன. தமிழரின் வரலாற்றுத் தாயகத்தை இராணுவ ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தால் தமிழரின் தாயக, தன்னாட்சிக் கோரிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம் என்பதும், அதனால் இக் கோரிக்கைகளை முன்வெடுக்கும் புலிகளின் போராட்டத்திற்கும் முடிவுகட்டிவிடலாம் என்பதும் சிங்கள அரசின் திட்டமாகும்.

இந்த அந்தரங்க நோக்கங்களின் அடிப்படையிலேயே சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தின் இராணுவ, அரசியல் அணுகுமுறைகள் அமையப்பெற்றுள்ளன. ஆனால், சிறீலங்காவின் பரப்புரை இயந்திரங்கள், உலக சமூதாயத்திற்கு வித்தியாசமான ஒரு கதையை எடுத்துக்கூறுகின்றன. உண்மையான நோக்கங்களை இருட்டடிப்புச் செய்து, பொய்யான புனைகதைகளை எடுத்துக்கூறிவருகின்றன "பயங்கரவாத அச்சுறுத்தல்" என்றும், "சமாதானத்திற்கான போர்" என்றும், "புலிகளின் சர்வாதிகார ஆட்சியிலிருந்து தமிழரை விடுதலை செய்வது" என்றும் கற்பனாவாதக் கட்டுக்கதைகளைக் கூறிவருகின்றன. சிறீலங்கா அரசின் இந்தப் பொய்ப் பிரச்சாரங்களை நம்பி ஏமாந்து போகாமல், சுதந்திரத்திற்காகவும் கௌரவத்திற்காகவும் தமிழர் நடத்திவரும் நியாயமான போராட்டத்தின் உண்மைக் கதையை உலக சமூகம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே, எமது ஆவல்.

அரசியற் குழு
தமிழீழ விடுதலைப் புலிகள்.

# உலக மனச்சாட்சியின் உரத்த குரல்களுக்கு ஒரு விண்ணப்பம்.

## உலைக்களம்

– வியாசன்

எம் மண்ணில் இனிவரும் நாட்களில் . —

மந்தமாருதம் தழுவும் வசந்தோற்ஸவம்.
மரங்களுக்கு ருதுசோபனம்.

குயில்கள் எம்முற்றத்து வேம்புகளில் வந்து
குக்கூவெனக் குரலெடுத்துக் கூவும்.

அடுத்தடுத்துவரும் திங்கட்கிழமைகளில்
அம்மன் கோவில்களில் பொங்கல் நடக்கும்.

வேப்பிலையும், வெட்டரிவாளுமாக
காவலிருந்த தேவியின் மேனிகுளிரும்.

வெக்கை தணிந்து போவாள் வீரமாகாளி.

எனினும் எம்மண் தன்னிலைமை மாறாது.

பணிதலறியாதவள் எம்தாய்.

கண்களில் மையும்;
கால்களில் சிலம்பெனினும்
கைகளிலிருந்து வீரவாள் நழுவாது.

சுற்றிவளைத்து எல்லைகளைச் சுருக்கி,
தேசத்தை சிறையிருத்திவிட்டு,
பேசலாம் வருகவென மேசைக்கழைத்து-
எச்சிற்சோறளித்து ஏமாற்றிவிடலாமென
யாரும் நினைத்தால்.... ..
பாவம் அவர்கள்.

வெட்டியடித்துவிட்ட வெறும் வயலென்று
எட்ட நின்று எம்மைக் கணக்கிடுவோர் எவரெனிலும்—
தாங்கள் முளைக்கப் போட்டிருக்கும் நாற்று மேடையை
முதலில் அளவெடுத்துக் கொள்ளுங்கள்.

உள்ளே எரிந்தபடி கிடக்கும் எரிமலையை
கொத்திப் பிளந்து குளிரவைப்போமென
எத்தனை பேர் வந்து போயினர்.

சோதிப்பிழம்பை எவராலும் தொடமுடியவில்லை.

பசித்த வயிறெனிலும்
யாசித்தறியாதவள் எம் தாய்.

வாசலுக்கு எவர் வந்தாலும் வரவேற்பாள்;
அடங்கிப் போவென யாரும் பணித்தால் ...
எக்காளத்தொனியில் எம் தாய் சிரிப்பாள்.

விழிகள் சிவந்து விரிய;
சீதளத் திருமுகத்தில் தீயெழ
பிள்ளைகளைப் போர்க்களமனுப்புவாள் பெருமாட்டி.
உலக மனச்சாட்சிக்கு
ஒருவிண்ணப்பம்.

எத்தனைவதைபட்டு
இடிந்துள்ளோம்.

இங்கே... குஞ்சுகளை இழந்து
ஒவ்வொரு கூடும் துடிக்கிறது.

உயிரைக் கரைத்தெடுத்த
நீரில் உலையேற்றி
அமுதுபடைக்கின்றோம்.

எம்மை
தூக்கி நிறுத்த ஒருவரற்று
தோளிற் சுமைதாங்கியுள்ளோம்.

ஆண்டனுபவிக்க
ஒரு அரசுகட்டில் –
வேண்டுமென்பதற்காக
நாங்கள் போராடவில்லை.

பத்துத்
தலைமுறைக்குச்
சொத்துச் சேர்த்துவிட்டு
செத்துவிடவேண்டுமென்ற
சொப்பனங்கள் எமக்கில்லை.

தங்கக் கட்டிலில் சயனிக்கும்
கனவேதும் கூட
எங்களுக்குக் கிடையாது.

எங்களை மனிதர்களாக...
எங்களைத் தமிழர்களாக...
வாழ வழிசமைத்தீர்களானால்...
கோடிநமஸ்க்காரம்.

உலக மனச்சாட்சியின்
உரத்த குரல்களே!



உண்மைக்கு ஒளியூட்டுங்கள்.
தர்மத்துக்குச் சாட்சியாகுங்கள்.

''நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்''
ஆதிக்கத்துக்கெதிராக
போரிடு என்று
அப்பர்சுவாமிகள் போதித்த
அனல்வரியிது.

குனிந்த தலை நிமிராது
பணிந்து போவென்று
எந்த மதமுமே
எடுத்துரைத்தது கிடையாது.
அடக்கவருபவர்முன்
அடங்கிப் போவென

கடவுளெவரும்
கட்டளையிட்டதில்லை.

அன்புக்கு
தலைவணங்கு என்பது
ஆணவத்துக்குச்
சாமரம் வீசென்று அர்த்தமல்ல ..

சாந்த சொரூபம்,
சமரச தேவர்களென
நம்பி ஏமாந்தவரலாறே
நமது.

காளான்களுக்குக் குடைபிடித்து
கைசலித்தவர்கள் நாங்கள்.



கொஞ்சம் நிமிர்ந்து உட்கார நினைத்தாலே ..
சிம்மாசனத்துக்குத் தீமூட்டி விடுகின்றனர்.

திறைசெலுத்தி சிற்றரசாக இருவென்றால்,
தமிழன் அங்க அடையாளங்களையிழந்து
அழிந்து விடுவான்.

நாங்கள் சாவுக்குத் தாலிகட்டி
பாடைக்குப் பரிசு கொடுப்பவர்களல்லர்.

அமைதிப் புறா வந்து தோளிலிருந்தால் —
அதைத் தட்டிவிடுபவர்களுமல்ல.

வெள்ளைப் பூக்களே எமக்கும் விருப்பம்.

இலைசொரிந்து மொட்டை மரமாகி
எழிலிழந்து கிடக்கிறது எம் வாழ்வு.

ஊற்றுவாய் அடைத்த கிணறு போல்
இடிந்து கொண்டிருக்கிறது எம் தேசம்.

புயலடித்த பூமிபோல
அழகிழந்து விட்டாள் எம் அன்னை.

வாழ்வுக்கு ஏங்குவதே எம் வரலாறாகி விட்டது.
விலங்கற்றுக் கைகளை வீசி
எம் தெருக்களில் நடக்கவே விரும்புகின்றோம்.

நில்லென ஒருவன் நிறுத்தவும்,
செல்லென இன்னொருவன் உத்தரவிடவும்-
எஜமானர்களற்ற பூமிக்கே ஏங்குகின்றோம்.

காற்றைப் போல ஒரு கட்டற்ற வாழ்வு
நேற்றெமக்கு இருந்தது.

மீண்டுமந்த வாழ்வை
எம் வாசலிற்காண அவாவுற்றோம்,

கேட்டோம்!

தரமறுத்த போதே
இந்தத் தர்மயுத்தம் கருக்கொண்டது.

எந்த வழியெனிலும்
எமக்கு வேண்டும் விடுதலை.

கோடி இன்னல்கள் வந்து குதறட்டும்.
ஆடி விழாது இந்த ஆலமரம்.

நிலத்தைப் பறித்து நெருப்பூட்டுவதால் ..
பலமிழந்து போகாதெம் படையணி.

ஒன்று பத்தாகி .. பத்து நூறாகி
வென்றொருநாள் வீடுவரும் கன்றுகள்.

துப்பாக்கி வாயில் —
உலோகச் சன்னங்களுக்குப் பதிலாக
பூக்களைச் சொருகச் சொல்கின்றீர்.

சரி, அப்படியே செய்கின்றோம் ஆண்டவரே!
எமக்கு விடுதலைப் பொருளைத் தருவதாக இருந்தால் —

உலக மனச் சாட்சியே!

சமுத்திரங்களைக் கடந்து .
உங்கள் கைகள் நீளுகின்றன-

நமக்காகவென்றால் .
நன்றிகள்.

# சிங்கள வான்படைக்கு இது இலையுதிர்காலம்

**20** வருடப் போராட்ட வரலாற்றில் முதற்தடவையாக, சிங்களப்படை பெரும் நெருக்கடி ஒன்றிற்குள் சிக்குண்டுள்ளது. மூன்றாம் ஈழப்போர் ஆரம்பமாகி, கடந்த 24 மாத காலத்தில் வான்படை தனது 17 வான்கலங்களை அடுத்தடுத்து இழந்துள்ளது. சுட்டுவீழ்த்தப்பட்டவை - காணமற்போனவை தொழில்நுட்பக் கோளாறுகளால் வீழ்ந்தவை - என்று பல வகைமாதிரிகளுக்குள் அடக்கப்பட்டாலும், சிறீலங்காவைப் போன்ற சிறிய நாட்டின் விமானப்படைக்கு இது, பேரிழப்பு என்பதில் ஐயமில்லை.

குடாநாட்டைச் சிங்கள இராணுவம் கைப்பற்றிய பின்னர் அதற்கான இராணுவ விநியோகங்களை மேற்கொள்ளும் முக்கிய பணி விமானப்படையின் தலையில் சுமத்தப்பட்டிருந்தது. இதுவரை நாளும், போரில், வரையறுக்கப்பட்ட பாத்திரத்தை வகித்து வந்த வான்படை இப்போது, குடாநாட்டிற்கான இராணுவ விநியோகங்களில் கணிசமானபகுதியை நிறைவேற்றும் பாரிய பணியை ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது. குடாநாட்டிற்கான கடல்வழி விநியோகத்தை மட்டுப்படுத்தப்பட்ட வகையிலும், மெதுவான வேகத்திலும் நடாத்தக்கூடிய நிலையிலேயே சிங்களக் கடற்படை உள்ளது. எனவே, வேகமான முறையில், நாள்தோறும் செய்யவேண்டிய இராணுவப் போக்குவரத்துக்கு தரைவழிப்பாதை ஒன்று இல்லாததால், வான்பாதையில் முழுமையாகத் தங்கியிருக்கவேண்டிய கட்டாயம் சிங்களப்படைக்கு எழுந்துள்ளது.

பலாலிக்கும் - கொழும்புக்குமான இருவழிப்பயணமாக, நாளொன்றுக்கு, இரண்டாயிரம் படையினரையும் - 700 அந்தர் எடையுடைய அத்தியாவசியப் பொருட்களையும், விமானங்கள், ஏற்றி இறக்குவதாக வான்படைத்தளபதி பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார். 'இப்போது, அந்த வான்போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது' என முன்னாள் விமானப்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

வான்படை இழந்த 17 விமானங்களின் மொத்தப் பணப்பெறுமதி சுமார் 350 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. புதிதாக இவற்றைக் கொள்வனவுசெய்து - வான்கல இழப்புகளை ஈடுசெய்யவேண்டுமாயின் 350 கோடி ரூபாய்களைக் கொடுத்து திறைசேரி உதவவேண்டும். ஆனால் 'மேலதிக நிதியை ஒதுக்கத்தேவையான பணம் திறைசேரியில் இல்லை, என திறைசேரியின் பொருளாளர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார். இவ்வாண்டிற்கான பாதுகாப்புச் செலவீனமாக, ஏற்கெனவே, சுமார் ஐயாயிரம் கோடி ரூபாய்களை அரசு, ஒதுக்கியுள்ளது. இராணுவ உபகரண இழப்புகளை ஈடுசெய்யவென மேலும் பல நூறுகோடி ரூபாய்களை ஒதுக்கவேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு எழுந்துள்ளது. உபகரண இழப்புகளை விரைவில் ஈடுசெய்ய அரசாங்கம் முயலும் என்பது வெளிப்படை..ஆனால் அனுபவம்மிகுந்த விமானிகளின் இழப்பை மற்றும் தொடர்ச்சியான இழப்புகளால் வான்படையினர் மத்தியில் எழுந்துள்ள போர் உறுதிச் சீர்குலைவை இலகுவில் ஈடுசெய்யமுடியாது. 350 கோடிரூபா பெறுமானமுள்ள 17 வான் கலங்களுடன் சேர்த்து - விமானிகள், தொழில்நுட்பவியலாளர்கள் உட்பட 440 படையினர் அழிந்துள்ளனர்.

சிங்கள அரசின் முப்படைகளில் ஒன்று, இன்றைய நிலையில், முடமாகிப்போயுள்ளதைச் சுட்டிக்காட்டி சிங்களதேசத்துப் பத்திரிகைகள் படைத்தலைமையைக் கண்டிக்கின்றன. →

*இங்கே தரப்பட்டுள்ள, வானூர்திகளின் பணப் பெறுமதி - அநேகமாகச் சரியான - அவற்றின் அடிப்படை விலைகளாகும். இவற்றில் பொருத்தப் பட்டிருந்த சுடுகலங்கள், யுத்தக்கருவிகள், சிறப் புச் சாதனங்கள் போன்ற குறிப்பிடத்தக்க ஏனைய வற்றின் விலை வேறானதாகும்.*

*இந்தப் பதினேழு விமானங்களைத் தவிர மேலும், கட்டுநாயக்காவில் ஒரு ''கிபிர்'' விமானமும், வட வான்பரப்பில் வெள்ளோட்டத்தின்போது ஒரு ''தன்னியக்க'' வேவு விமானமும், இன்னுமொரு ''தன்னியக்க'' வேவு விமானமும் - மார்ச் திங்களின் நடுப்பகுதியில் விபத்துக்குள்ளாகி அழிந்தன. எனினும், இந்தச் செய்திகள் திட்டமிட்டு மறைக்கப்பட்டுவிட்டன.*


☆ மேலே தரப்பட்டுள்ள விமான அழிவுகள் தொடர்பான விபரங்கள், படைத்துறை வட்டாரங்களின் ஆதாரத்துடன் கொழும்பு ஏடுகளில் வெளியானவை.




28.04.95இல் யாழ்ப்பாணத்தில் 'அவ்றோ' வீழ்த்தப்பட்டது. விலை 10 கோடி ரூபா. 48 பேர் உயிரிழந்தனர்.




29.04.95இல் யாழ்ப்பாணத்தில் ''அவ்றோ'' வீழ்த்தப்பட்டது. விலை 10 கோடி ரூபா. 52 பேர் உயிரிழந்தனர்.




14.07.95இல் யாழ்ப்பாணத்தில் ''புக்காரா'' வீழ்த்தப்பட்டது. விலை 13.75 கோடி ரூபா. ஒருவர் உயிரிழந்தார்.




13.09.95 இல் மேற்குக் கடலில் ''அன்ரனோவ் 32'' வீழ்ந்தது. விலை 22.5 கோடி ரூபா 70 பேர் உயிரிழந்தனர்.



18.11.95இல் வட கடலில் ''வை.8'' வீழ்த்தப்பட்டது. விலை 40 கோடி ரூபா. 6 பேர் உயிரிழந்தனர்.




22.11.95இல் வட கடலில் ''அன்ரனோவ்32'' வீழ்ந்தது. விலை 22.5 கோடி ரூபா 63 பேர் உயிரிழந்தனர்.




22.01.96 இல் வட கடலில் ''எம். ஐ. 17'' வீழ்ந்தது. விலை 10 கோடி ரூபா. 18 பேர் உயிரிழந்தனர்.



7.12.96இல் வவுனியாவில் ''பெல் 212'' அழிக்கப்பட்டது. விலை 21.5 கோடி ரூபா.



16.1.97இல் பூநகரியில் தன்னியக்க வேவு விமானம் வீழ்ந்தது. விலை 5 கோடி ரூபா.




20.01.97இல் வட கடலில் ''வை 12'' வீழ்ந்தது. விலை 5 கோடி ரூபா. 04 பேர் உயிரிழந்தனர்.



22.01.97இல் நீர்கொழும்பில் ''கிபிர்'' வீழ்ந்தது. விலை 30 கோடி ரூபா.




12.02.97இல் அநுராதபுரத்தில் ''தன்னியக்க வேவு விமானம்'' வீழ்ந்தது விலை 5 கோடி ரூபா.



21.02.97 இல் இரத்மலானவில் ''அன்ரனோவ் 32'' விபத்துக்குள்ளானது. விலை 22.5 கோடி ரூபா. 04 பேர் உயிரிழந்தனர்.




03.03.1997 அநுராதபுரத்தில் ''எம். ஐ. 17'' விபத்துக்குள்ளானது. விலை 10 கோடி ரூபா.



06.03.97 இல் திருக்கோணமலையில் ''வை12'' அழிக்கப்பட்டது. விலை 5 கோடி ரூபா.



15.03.97 இல் பொலநறுவையில் ''புக்காரா'' வீழ்ந்தது. விலை 13.75 கோடி ரூபா.



19.03.97இல் முல்லைக் கடலில் ''எம்.ஐ 24'' வீழ்ந்தது. விலை 10 கோடி ரூபா. 08 பேர் உயிரிழந்தனர்.

## சிங்கள வான்படைக்கு...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதலாம் ஈழப்போர் காலத்திலும் – இரண்டாம் ஈழப்போர் காலத்திலும் சிங்கள வான்படையின் எட்டு வான்கலங்களை புலிகள், அழித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, முன்னர், சீனன்குடா வான்படைத் தளத்தில் நடந்த விபத்து உட்பட பல்வேறு எதிர்பாராத சம்பவங்களால் 7 இற்கும் மேற்பட்ட வான்கலங்கள் அழிந்திருந்ததும் சுட்டிக்காட்டத்தக்கது. இந்தவகையில், முன்னரும், சிங்கள வான்படை சுமார் 15 வான்கலங்களை இழந்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதய நிலையில், தரைப்படைக்கு உதவியாக தரைத்தாக்குதல்களில் ஈடுபடவோ! அல்லது விநியோகத்தேவைகளை நிறைவேற்றுவதற்கான பறப்புக்களைச் செய்யவோ! சிரமமான நிலையில் சிங்களவான்படை உள்ளது. என்று 'எயஃபோஸ் மந்த்லி' என்ற பிரித்தானிய இராணுவ ஏடு செய்திவெளியிட்டுள்ளது.

'தரைத்தாக்குதல்களில் ஈடுபடக்கூடிய தகைமையுடன் ஒரே ஒரு புக்காரா மட்டும் சேவையில் உள்ளது.'

விநியோகத் தேவைகளைப் பொறுத்தவரை நான்கு அன்ரனோவ் விமானங்கள் உண்டு. வான்படையிடமுள்ள மொத்தம் ஒன்பது வை–12 விமானங்களில் 6 மட்டும் சேவையில் உள்ளது. அதுபோல, எம்ஐ: 17 வகை உலங்குவானூர்திகள் பதினொன்றை வான்படை கொண்டுள்ள போதிலும் அதில் மூன்று மட்டுமே பறப்புக்கு உகந்ததாக இருக்கின்றன. உதிரிப்பாகப் பற்றாக்குறைகளால், தொழில்நுட்பக் கோளாறுகளால், பாவனைக்காலம் முடிவடைந்ததால்...... என்று பல்வேறு காரணிகளால், இருக்கின்றவான்கலங்களைப் பயன்படுத்த முடியாது சிறிலங்காவான்படை திண்டாடுகின்றது என்று அந்த இராணுவ ஏடு தெரிவித்துள்ளது.

'போர்க்களத்தில் உயிருக்கு அஞ்சுவதைவிட விமானப்பறப்பின் போதுதான் உயிரச்சம் ஏற்படுகின்றது' என்று தரைப்படைச் சிப்பாய் ஒருவர் தன்னிடம் கூறியதாக முன்னாள் விமானப்படைத்தளபதி தனது இராணுவக் கட்டுரை ஒன்றில் எழுதியுள்ளார்.

அடுத்தடுத்தும், அதேவேளை, புதிரானமுறையிலும் சிறிலங்காவின் வான்கலங்கள் அழிந்துபடுவதால் – அரசபடையினர் மத்தியில் வான்படை தொடர்பாக எழுந்துள்ள அவநம்பிக்கையை முன்னாள் விமானப்படைத் தளபதியின் அனுபவம் அழகாகச் சுட்டிக்காட்டுகின்றது.

குடாநாட்டுப்படைக்கான இராணுவ விநியோகங்களை சுலபமாகவும் – செலவுக்குறைவாகவும் செய்வதற்கு ஒரு தரைப்பாதை அவசியம் என்பது படைத்தளபதிகள் வலியுறுத்தும் ஒரு விடயம். கடல்பாதை மூலம் குடாநாட்டுக்கான இராணுவத் தேவைகளை ஈடுசெய்ய முடியாதிருந்த சூழலில்தான் வான்பாதை மூலம் விநியோகங்களை வேகப்படுத்தி விநியோகப் பிரச்சினையைச் சமாளிக்க படைத்தலைமை முயன்றிருந்தது. ஆனால் வான்கல இழப்புக்களைத் தொடர்ந்து வான்போக்கு வரத்து இடைநிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றது. அதேவேளை — அன்று கடற்படை மீது புலிகள் நடாத்திய ஒரு திகைப்பூட்டும் தாக்குதல் மூலம் கடல்வழி விநியோகத்தை கடற்புலிகள் மேலும் சிரமமாக்கியுள்ளனர்.

கடற்புலிகளின் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்காக கரையிலிருந்து 20 கடல்மைல்களுக்கும் அப்பால் பயணம் செய்த கப்பற் தொகுதி மீதே அன்றைய தாக்குதல் நடாத்தப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து கப்பற்தொகுதி தனது பயணத்தைத் தொடரமுடியாது திருகோணமலை திரும்பியதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்திருந்தன. இந்தக் கடற்சண்டைக்கு அரசதரப்பில் மிகமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. 108 புலிகள் கொல்லப்பட்டனர்' என சிங்களக்கடற்படைத் தளபதி அறிக்கை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த தகவல் உண்மையல்ல. நான்கு கடற்கரும்புலிகள் உட்பட ஐந்து புலி வீரர்கள் அந்தக் கடற்சமரில் வீரச்சாவடைந்திருந்தனர். ஆனால், சிங்களக்கடற்படைத் தளபதியின் கணிப்பு கடற்சமரின் இராணுவ பரிமாணத்தை எடுத்துக்காட்டுகின்றது. அவர் கணக்கிட்டபடி புலிகள் தரப்பில் இழப்புபேற்படாதது – கடற்சண்டை புலிகளுக்கு சாதகமாகவே முடிந்துள்ளது என்பதை நிரூபிக்கப்போதுமானது. அத்துடன் கடல்போக்குவரத்துக்கு கொடுக்கப்பட்ட கப்பல்பாதுகாப்பை அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தையும் அந்தக் கடற்சமர் கொடுத்துவிட்டது.

வான்படை விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்ற சூழலில், கடல்வழிவிநியோகம் மேலும் சிரமத்தைச் சந்தித்துள்ள நிலையில் குடாநாட்டுப்படைக்கான இராணுவ விநியோகம் மேலும் கடினமடைந்துள்ளது என்பதே இன்றைய இராணுவ யதார்த்தமாகும்.

## கிழக்கு யுத்த முனை...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையின் கட்டுப்பாட்டில் இல்லாமலும் உள்ள மட்டக்களப்புத் தளப்பிராந்தியத்தின் இன்றைய கள நிலவரத்தில் –

வாவிக்கு மேலாக எழுவான் கரையோடு தரைத் தொடர்பு படுத்தும் வலையிறவுப் பாலத்தை மட்டும் நம்பி படுவான்கரைப்பகுதிக்குள் வவுணதீவு முகாமை அமைத்தது சிங்களப் படை.

முன்பொரு தடவை வட போரரங்கின் துருப்புக்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக வவுணதீவிலிருந்து முகாம் அகற்றப்பட்ட போதும், அவசியத் தேவை கருதி மீண்டும் அமைக்கப்பட்டது.

மாவட்டத்தின் கள நிலைமையில், வவுணதீவு முகாம், சிங்களப் படைக்கு காத்திரமான பயன்பாட்டைத்தான் வழங்கியது

நீரேரியைக் கடந்து, நகர்ப்பிரதேசத்திற்குள் புலிகள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக, பதுங்கித்தாக்கும் பிரிவுகளையும், வேவுப் பிரிவுகளையும் கொண்டு வாவியின் மறுகரையோரத்தை தொடர்ச்சியான கண்காணிப்பின் உள் வைத்திருப்பது அந்தத் தளத்தின் முதன்மைப் பணிகளுள் ஒன்று. அத்தோடு–

தமது கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத – புலிகளின் நிர்வாகத்திற்குட்பட்டிருந்த – பெரு நிலப் பரப்பினுள் நாசகாரத் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதையும், புலனாய்வு வேலைத் திட்டங்களை நகர்த்துவதையும், சிங்களத் தரப்பு, இந்த முகாமைச் செயற்பாட்டு மையமாகக் கொண்டே நடைமுறைப்படுத்தியது.

இன்னொரு வகையில் - மட்டு நகர்ப் பிரதேசம் மீது புலிகள் பெரும் தாக்குதல் நடவடிக்கை ஒன்றைத் தொடுப்பார்களாயின், அதனை அவர்கட்குச் சாத்தியமற்றதாக்கி, நகருக்கு வெளியிலேயே – வாவிக்கு மறுகரையில் – பெரும் சண்டைக்களத்தைச் சந்திக்க வைப்பதற்காகவும் அந்த முகாம் ஒரு முன்னரங்கத் தளமாக அமைக்கப்பட்டிருந்தது.

முகாம் தாக்குதலுக்குள்ளாகுமிடத்து, ஒரு கிலோ மீற்றர் தூரத்திலிருக்கும் மறு கரையிலிருந்து உடனடியாக உதவி வழங்கி தாக்குதலை முறியடித்து முகாமை முழுமையாகக் காப்பாற்ற முடியும் என்ற உறுதியான நம்பிக்கையோடுதான் எதிரி அங்கு முகாமை இட்டிருந்தான்.

அது துணிகரமான முயற்சி. கிழக்கின் கள நிலவரத்தைப் பொறுத்தவரை, இது ஒரு ஆச்சரிய அடி. கேள்விக்கிடமற்ற பலத்துடனான பின்னணித் துணையோடு வீற்றிருந்த முன்னணித்தளத்தை எதிர்கொண்ட சவால்ச் சண்டை, மட்டக்களப்பு நகரத்திலிருந்தும், மாவட்டத்தில் நிறுத்தப்பட்டுள்ள 3ஆவது டிவிசன் படையணியின் கட்டளைப் பணியகத்திலிருந்தும் ஐந்தே கிலோ மீற்றர் தூரம். வான் படைத் தளத்திலிருந்து மூன்றே கிலோ மீற்றர் தூரம். 120 மில்லி மீற்றர், 81 மில்லி மீற்றர் எறிகணை மோட்டார்களாலேயே குறிவைக்கக் கூடிய வீச்சுத்தூரம். தளத்தின் இந்த அமைவிடம், தாக்குதலின் தாற்பரியத்தை எடுத்தியம்பும்.

தாக்க முயலமாட்டார்கள் என நம்பியிருந்த போதும், புலிகள் தாக்கவிருக்கின்றார்கள் எனத் தகவலறிந்த எதிரி தயார்ப்பட்டு நிற்க-

கம்பீரமாக வீற்றிருந்த வவுணதீவுத் தளத்தின் கம்பிவேலி கடந்து புலிகள் புகுந்த போது, கிழக்குக் களம் அதுவரையில்லாப் பெரும்சண்டையரங்கைச் சந்தித்தது.

முதுநிலைப் படைத்துறை ஆணையாளர்களுள் ஒருவரான கருணாஅம்மான் அவர்களின் கண்காணிப்பின் கீழ், முதன்மைக் கள வழிநடத்துனர்களுள் ஒருவரான ராம் அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட தாக்குதலை, கிழக்கின் முன்னணித் தளபதிகளுள் ஒருவரான பிரபா நேரடியாகக் களத்தில் வழிநடாத்தினார்.

மகளிர் படையின் மட்டக்களப்பு – அம்பாறை சிறப்புத்தளபதி லெப். கேணல் மதனா மேஜர் சுசலன். மேஜர் குட்டி மற்றும் நாதன், சுது ஆகியோரது தாக்குதலணிகள் நேரடியாகவே பிரதான முகாமைத்தாக்க -

லெப். கேணல், பாலேந்திரா மற்றும் தாத்தா ஆகியோரது தாக்குதலணிகள் பாலத்தடி உபமுகாமை வீழ்த்தி, எதிரிக்கு உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காக பாலத்தையும் தகர்த்த பின், பிரதான முகாமை வீழ்த்தும் முக்கிய சண்டையின் களத்திலிறங்கின.

நள்ளிரவு கடந்து 1.00 மணியளவில் ஆரம்பித்த சண்டை காலை 10.00 மணிவரை நீடித்தது. ஊகித்திருந்ததை விடவும் களம் சற்று மாறுபட்டதாக அமைந்துவிட்டது. திட்டமிடலின் போதே சண்டை கடுமையானதாக இருக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால், எதிர்பார்த்ததை விடவும் சண்டை கடுமையானதாக இருந்தது. கணிப்பீடு செய்து வைத்திருந்ததை விடவும், எதிரியிடமிருந்து சற்றுக் கூடுதலான எதிர்ப்பைச் சந்திக்க வேண்டி நேர்ந்தது வான் போரூர்திகளினதும் நகர்ப் பிரதேசத் தளங்களிலிருந்த எறிகணை மோட்டர்களினதும் படு தாராளமான தாக்குதல் உதவியுடன் தாக்குப் பிடித்த எதிரி, முகாம் புலிகளிடம் வீழ்வதைத் தடுப்பதற்காக தன்னாலான உச்சக்கட்ட முயற்சியைச் செய்தான். மொறக்கொட்டாஞ்சேனை முகாமிலிருந்த 'ஆட்டிலறி பீரங்கியும், புலிகளின் அணிகள் மீது சாவினைப் பொழிந்தது. எனினும் தளத்தை முழுமையாக வீழ்த்தி வெற்றிகொள்ள வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன், வீரர்கள் விழுவிழுவும் வியூகமிட்டு வியூகமிட்டு முன்னேறிய புலிவீரர்கள் முகாமைப் பூரணமாக அழித்தொழித்த பின்னரே களத்தைவிட்டு வெளியேறினர்.

விடுதலைப் புலிகளின் 94 வீரர்கள் இந்த வெற்றியின் மடியில் விழுந்தனர். முகாம் மீதான தாக்குதலிலும், நகர்ப்பிரதேசத் தளங்கள் மீதும், முகாம் படையினருக்கு உதவிக்காக வாவிக்கு மறுகரையில் உலங்குவானூர்திகளில் தரையிறக்கப்பட்டவர்கள் மீதும், வான் படைத் தளம் மீதுமான மோட்டார் எறிகணைத் தாக்குதல்களிலும் குறைந்தது 165 சிங்களத் துருப்புக்கள் கொல்லப்பட்டதாக நம்பகமாக அறியக்கிடைக்கின்றது.

## நுணுக்குக்காட்டி...

"போர் நிறுத்தத்திற்கே இடமில்லை, பேச்சுவார்த்தைக்குக் காலம் கனியவில்லை, என்ற கதிர்காமரின் கூற்று, இந்த அரசின் சமாதானம், அமைதி என்ற கோசமெல்லாம் வெறும் அரசியல்வார்த்தைகளே என்பதைத் தான் நிரூபிக்கின்றன. கதிர்காமரின் கூற்றையும், ஐ.தே.க விற்கும் ஜனாதிபதிக்கும் ஏற்பட்ட உடன்பாட்டையும் இணைத்துப் பார்க்கின்ற சாதாரண மக்கள், யுத்தத்தின் கடுமை இன்னும் அதிகரிக்கப் போகின்றது; தமிழ் மக்களின் அவலங்கள் அதிகரிக்கும் என்ற முடிவுக்கே வருகின்றார்கள்"

– பெ. சந்திரசேகரன்
பிரதியமைச்சர்

நிகைகுரல் 12. 04. 1997

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள சிறிலங்கா அரசுப் படைகளை அங்கிருந்து விலக்கிக் கொள்ள அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் வகையிலான நிரந்தரத் தீர்வை ஏற்படுத்துவதற்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வழிவகை செய்ய வேண்டுமென, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிரந்தர அங்கத்துவம் வகிக்கும் உலக தேவாலயங்களின் கவுன்சில், சர்வதேச சட்ட அறிஞர்களின் ஆணைக்குழு, அனைத்துலகப் பத்திரிகையாளர்கள் சம்மேளனம், சர்வதேச கல்வி மேம்பாட்டு நிறுவனம் உள்ளிட்ட 53 நிறுவனங்கள் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

– பி பி சி
11. 04. 1997

ஆனால், இலங்கைத் தமிழர்கள் சந்திரிகாவை (உள்ளூராட்சித் தேர்தல் மூலம்) முழுமையாக புறக்கணித்து விட்டார்கள் என்றுதான் தெரிகின்றது. மிக முக்கியமான கொழும்பு நகராட்சிக்கவுன்சில் தேர்தலில் மக்கள் கூட்டணி தமிழர் ஒருவர் தலைமையிலான சுயேட்சை அணி ஒன்றுக்கு ஆதரவு தந்தது. ஆனால், கொழும்பு தமிழ் மக்கள் அதிரடியாக யு. என். பி. வேட்பாளரைத் தேர்ந்தெடுத்தார்கள். சந்திரிகா ஆட்சியில் அமைச்சர்களாக காத்திருந்த அவர்கள், புலிகளுக்கு எதிரான அரசின் நடவடிக்கைகளின் போது, பாதுகாப்புப் படையினரின் தொல்லைகளுக்கு ஆளானது தான் இதற்குக் காரணம்.

'' இந்தியா டுடே'' – தமிழ்
ஏப்ரல் 6 - 20 - 1997

# கிழக்கு யுத்த முனை: புதிய பரிமாணங்களூடு விரியும் களம்.

மணலாற்றில், வெலிஓயா ஆக்கிரமிப்புச் சிங்களக் குடியேற்றத்திட்டத்தின் மூலம் தமிழர் தாயகத்தின் ஒரு பகுதி அபகரிக்கப்பட்டதுடன், அதன் நிலத் தொடரைத் துண்டித்து வடக்கிலிருந்து கிழக்கை வேறாக்க சிங்களம் முயன்றுள்ளது.

இன்னொரு புறத்தே, கிழக்கில் -

அல்லை - கந்தளாய் ஆக்கிரமிப்புச் சிங்களக் குடியேற்றத்தின் மூலமாக திருககோணமலை - மட்டக்களப்பு மாவட்டங்களின் நிலத்தொடரைத் துண்டிப்பதற்கான சதி முயற்சி ஒன்று அரங்கேற்றப்பட்டதுடன் -

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்கு இடையில் இன்னொரு ஆக்கிரமிப்புச் சிங்களக் குடியேற்றத்தை நடாத்தி, மாவட்டங்களுக் கிடையிலான எல்லைக் கோட்டை மாற்றியமைத்து. தமிழரின் தாயக நிலத்தை சிதலமாக்கும் மற்றுமொரு சூழ்ச்சித் திட்டத்தையும் சிங்களம் நடைமுறைப்படுத்தியது.

நில அபகரிப்பு நடவடிக்கைகள் இவ்வாறு தொடர, மறு புறத்தே தமிழர் தரப்பின் ஐக்கியத்தைக் குலைககும் சதி நகர்வுகளையும் சிங்களப் பேரினவாதம் கிழக்கில் களத்திலிறக்கியது.

தமிழ் மக்களுக்கு விரோதமான கருத்துகளை முஸ்லிம்களுககுள்ளும், முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துகளை தமிழாகளுககுள்ளும் விதைத்தது. தமிழ்த் தரப்பினுள் முரண்பாட்டை வளர்த்தது. கலவரங்களும் மோதல்களும் நிகழ்வதற்குத் தூண்டியது. அடுத்தடுத்திருந்த தொடரான ஊர்களில், ஆண்டாண்டு காலமாகக் குடும்ப உறவுகளாகக் கூடி வாழ்ந்த மக்கள் சமூகங்களுக்குள் வெறுப்புணர்வை உருவாக்கியது. பன்பொருகாலத்தில், அவர்கள் வரலாற்றுப் பகைவர்கள் போலப் பகைத்துக் கொள்ளும் அளவுக்கு, சிங்களப் பேரினவாதிகள் வஞ்சக ஊக்கிகளாகச் செயற்பட்டனர்.

அதே போல -

வடக்கோடு இணையாமல் கிழக்குத் தனித்திருந்தால், அதற்கு மேம்பாட்டு அனுகூலங்களும், முன்னேற்றத்திற்கான சாதகத்தன்மைகளும் உண்டு என்று, வடக்கு விரோதக் கருத்தைக் கிழக்கு வாழ் தமிழர்களுக்குள் பரவச் செய்யும் சூழ்ச்சிப் பணியிலும் சிங்களப் பேரினவாதிகள் ஈடுபட்டனர்.

இவ்வாறாக -

'' தமிழர் தாயகம் '' கோட்பாட்டை அர்த்தமற்றதாக்கி - தமிழினத்தின் தனித்துவத் தேசியத் தன்மையைச் சிதைத்து - தமிழர்களது விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையைத் தகர்த்துவிட வேண்டுமெனில், கிழக்கை முழுமையாக அபகரித்து விடுவதே ஓரே வழி என்ற தீர்மானத்தோடு சிங்கள ஆளும் வர்க்கத்தினர் முனைப்போடு செயற்பட்டனர்; செயற்பட்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கைத் தொடரின் இப்போதைய இறுதிக் காட்சியாக இனப்பிரச்சனைக்கான ''தீர்வுத்திட்டம்'' என்ற போர்வையில், தமிழரின் தாயக பூமியை சட்ட பூர்வமாகக் கூறுபோடும் கைங்கரியத்தில் இன்றைய சந்திரிகா அரசாங்கம் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

முதலில், ''தனிமாகாணம்'' என்ற பெயரில் கிழக்கை வடக்கிலிருந்து பிரித்தெடுத்துவிட்டு, பின்பு-

''தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகிய மூவின மக்களுக்கும் தனித்தனியான வெவ்வேறு நிர்வாக அலகுகள்'' என்ற மூடுதிரைக்குப் பின்னால், கிழக்கை மூன்று துண்டிடும் ஒரு கபடத் தீர்வுத திட்டத்தை நடைமுறைப்படுத்தவும், சிங்கள ஆட்சியாளர்கள் துடியாய்த் துடிக்கின்றனர்.
இவ்வாறு-

> தமிழீழத் தேசியப் புரட்சியின் ஆயுதப் போரரங்கில், எப்போதும் தாக்கம் மிகுந்த, அரசியற் கேந்திரம மிக்க போர்க்களமாக கிழக்கு முனை விளங்கி வருகின்றது.

தமிழரின் பூர்வீக பூமியைத் துண்டாடி- அதன ஒருமைப் பாட்டைச சிதறடித்து - முழுமையாக அதனைக் கபளீகரம் செய்து விடுவதென்பது, சிங்களப் பேரினவாதிகள ஒரு போதும்ம கைவிடமாட்டாத, தமிழர் சுதந்திரப் போருக்கு எதிரான அரசியல மூலோபாயமாகவே திகழ்கின்றது.

நுட்பமான, அதேவேளை நாசகாரத்தன்மை மிக்க இநத அரசியல மூலோபாயததை வெற்றிகரமாக நடைமுறைப்படுதத வேண்டுமெனில், கிழககைத் தமது முழுமையான படைபலக் கட்டுபபாட்டு ஆதிக்கததனுள் வைத்திருந்தே ஆக வேண்டும எனபதைத் தீர்மானித்த சிங்களத் தரபபு- கிழககில் தமது போர்வலுவின் உறுதிப்பாட்டை மிகுநத ஆடர்களுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாகப பேணிவருகின்றது.
இநத வகையில, இப்போது -

அத்து மீறிக் குடியமர்த்தப்பட்ட பல பத்தாயிரம சிங்கள மக்கள் வாழும ஒரு குடியேற்ற பிராந்தியம் என்பதாலும்-

தமிழ் தேசிய இனப்பிரச்சனையின் அங்கமாகி, இலங்கை அரசியலில சார்ச்சைக்குரிய ஒரு மக்கள் சமூகமாகத் திகழும் முஸ்லிமகள - தமது பாரம்பரிய வாழ்விடமாகக கொணடு அதிக தொகையில் வாழும் பிரதேசம எனபதாலும்-

சிங்கள தேசத்தோடு தரைத் தொடர்ச்சியுடைய நீண்ட எல்லையைக் கொண்ட மாகாணம் என்பதாலும்.

பெரும் கடற்பரப்பையும், வளம் நிறைந்த பெரும் விவசாய நிலப்பரப்பையும் மட்டுமன்றி, திருக்கோணமலையின் புகழ் பூத்த துறைமுகத்தையும் தன்னகத்தே உடைய பொருண்மிய அனுகூலப் பகுதி என்பதாலும்-

தமிழீழத் தேசியப் புரட்சியின் ஆயுதப் போரரங்கில், எப்போதும் தாக்கம் மிகுந்த, அரசியற் கேந்திரம் மிக்க போர்க்களமாக கிழக்கு முனை விளங்கி வருகின்றது.

இராணுவ ரீதியாகப் பெரும் விளைவுகளைத் தரும் பொருது களமாக தற்போதைய நிலையில் வட போரரங்கே திகழ்கின்றது. யுத்தத்தின் போக்கைத் தீர்மானிக்கவல்ல சமர்முனையாகவும் அதுவே உள்ளது. இதே வேளையில்-

சிங்களத்தரப்பை இறுக்கமான நெருக்கடிக்குள் சிக்கவைக்கக்கூடிய அரசியல் ரீதியான விளைவுகளைத் தரவல்ல களமாக, கிழக்குப் போரரங்கே விளங்குகின்றது.

எனவே, நுட்பமான புதிய புதிய யுத்த வியூகங்களை வகுத்து, தலைவர் பிரபாகரன் அவர்கள், களச் சூழ்நிலைககுப் பொருததமான வழிமுறைகளினூடாக கிழககு முனையைத் தொடாச்சியாக நெறிப்படுத்திச் செலகின்றார்.

புலுகுணாவி அதிரடிப்படை முகாம் அழிக்கப்பட்டதன் தொடராக, வவுணதீவுப் படை முகாம் மீது நிகழ்ந்த பெருந்தாககுதல், கிழக்கில, புலிகள், யுததததை இனனொரு கட்டப் பரிணாமததிற்குள நகர்த்துவதைத் தெளிவாக்கியுள்ளது.


விகிதாசார ரீதியாக, எதிரிக்கு எம்மை விடப் பெரும் இழப்பைக் கொடுத்தல, அதே வகையில் பட்ட தொகையில் போர்ககருவிகளைக் கைப்பற்றுதல, பகைத்தளத்தை அழித்து, நிலத்தை மீட்டுத் தக்கவைததிருத்தல் போனற பெறுபேறுகள் இநதத் தாக்குதலின் முடிவாக விளையாத போதும-


தாக்குதலின் போரியற் பரிமாணம் கிழக்குக் களத்திறகுப் புதியது; பெரியது.

மட்டக்களப்பு வாவிக்கு மேற்குக் கரையில் உள்ள நகர்பபுறப் பரதேசம - எழுவான் கரை - சிஙகளப் படையின் கட்டுப்பாட்டின் கீழும் -


வர்விக்கு மறுகரையில் உள்ள மருத நிலப் பெரும் பரப்பு - படுவான்கரை - சிங்களப்

(9 ஆம் பக்கம் பார்க்க)



லெப். கேணல்
பாலேந்திரா



லெப். கேணல்
மதனா

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**